தென்மொழி

உள்ளே...

கலைஞர் அவர்களின் கடன்

போலியும் மாற்றும்

தமிழும் தமிழ்களும்

முத்தமிழ்கள்

தொல்லை 'பிள்ளை'யார்

வடமொழி எழுத்துகள்

செய்திகள்

மற்றும் பிற...

வழிவகை காண்பீரே !

உழைத்தாலும் வயிறார உண்ணாமல் உடுத்தாமல்
உயிர்க்குத் தீமை
இழைக்கின்ற வெங்கொடிய 'நச்சுக்கள்' வெறிகொண்டு
குடித்து மாளும்
பிழைப்பாதை விட்டகன்று நல்வாழ்வில் அவர்திளைக்கும்
வகைமை காணத்
தழைக்கின்ற மக்களினத் தலைவர்காள் முன்வருவீர்
கடமை என்றே!

கல்லில் நார் உரிப்பதுபோல் கடினஉழைப் பால்பெற்ற
காசை யெல்லாம்
இல்லாளும் குழந்தைகளும் ஏங்கிநிற்ப, எரிவாயில்
நுழைவ தைப்போல்
பொல்லாத 'நச்சுக்கள்' குடித்துயிரை இழக்கின்ற
கொடுமைக் கின்னே
வல்லாங்கு முடிவுசெய மக்களினத் தலைவர்காள்
வகை காண்பீரே!

- இறை

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி - 28
ஓலை - 10

தி.பி. 2027 : துலை 1996 அக்தோபர்

பெரியார் செய்த பெருந்தொண்டின் நோக்கம் நிறைவேற வேண்டும்!

அதுதான் அவர்க்கு நாம் செய்யும் நன்றி!
அவர்க்கு நாம் தரும் பெருமை!

('பெரியாரின் 111 - ஆவது பிறந்த நாள் மலரில்' - பாவலரேறு ஐயா அவர்கள் எழுதிய கட்டுரை)

(செப். 17 - பெரியார் பிறந்த நாளையொட்டி மீண்டும் வெளியீடப் பெறுகிறது)

திருவள்ளுவருக்குப் பின் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையும் நம்மால் முழு அறிஞராக - முழுத் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஓர் அறிஞர் பொதுமக்களுக்காக - அவர்களின் முழு நலன்களுக்காகவே தம் அறிவையும், அதனால் வெளிப்படும் சிந்தனைகளையும், அவற்றின் அடிப்படையில் அமைந்த செயற்பாடுகளையும், முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். மற்றபடி, அந்த அறிவு அவ்வறிஞர்க்கே பயன்படுமானால் (அஃதாவது அந்த அறிவைக் கொண்டு, எழுத்தாகவோ சொல்லாகவோ கருத்துகளாகவோ வெளிப்படுத்தி, அவற்றை விற்ற வருவாயைக் கொண்டு, அவரும் அவரைச் சார்ந்தவர்கள் மட்டுமே பயன் பெறுவார்களானால்) அவ்வறிவால் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. அறிவின் பயனே, அஃது எந்த அளவுக்குப் பிறர்க்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்ததுதான்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். - என்பது திருக்குறள்.

கூர்த்த அறிவு கூரிய கத்தியைப் போன்றது. கத்தி மிகவும் கூர்மையாக உள்ளது என்பதற்காகவே, அதை யாரும் மதிப்பதில்லை. அது பயன்படும் வகையாலேயே அது மதிப்புப்பெறும்.

மேற்சொன்ன திருக்குறளில் மக்கட் பண்பு என்பது மக்கள் நலனுக்குப் பயன்படும் உணர்வு என்று பொருள்படும். மக்கள் நலத்துக்கென்று தம் அறிவைப் பயன்படுத்தாத எந்த அறிஞரும் அறிஞர் ஆகார். அவர் வெறும் மரத்தைப் போன்றவரே!

ஒருவர், அறிவு விளையும் களமாக இருக்கலாம். ஆனால், ஒரு நிலத்தில் விளைந்த விளைவு எவ்வாறு மக்களுக்குப் பயன்பட வேண்டுமோ, அவ்வாறு ஓர் அறிவுக் களமாகிய ஓர் அறிஞரிடம் விளைந்த அறிவு, மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும். இதுவே இயற்கையின் கோட்பாடு. இக் கோட்பாட்டிற்கு மாறாக இயங்குபவர் அறிஞராயினும் அவர் வறிஞரே! வெறுமையானவரே!

ஒரு பொதுநிலைச் சிந்தனையாளர், அறிஞர், தனி நிலை

(தொடர்ச்சி - அட்டை மூன்றாம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

நம்முச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

சுவடி : 28) தி.பி.202எ - துலை (அக்தோபர் - '96) (ஓலை - 10

கலைஞர் அவர்களின் கடன்!

எவர் சொல்லையும் கேட்காமல், அறிஞர்களையும் மதிக்காமல் அறக்கொடியவளாய் அரசேறியிருந்த செயலலிதாவின் வல்லாட்சியை அமிழ்த்தி அரசேறியிருக்கும் தமிழகத்து முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன் தமிழகத்திற்குச் வேண்டிய பெருங்கடன் தலைதூக்கி நிற்கின்றன.

ஒவ்வொரு முறையும் கலைஞர் அரசுக்கட்டிலேறிய பின்னும், நம் அரும்பெறல் ஆசான் பாவலரேறு ஐயா அவர்கள், கலைஞரை நோக்கி, இன்ன இன்ன செய்ய வேண்டும்; அதனால் இத் தமிழகம் உய்யவேண்டும் எனத் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார்கள்.

கலைஞர் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்தது போன்றல்லாமல், இதற்கு முன்னிராதபடி பெரும் வலுவோடேயே இன்றைக்கும் அவர் தமிழக முதலமைச்சராகியுள்ளார். இந்திய நடுவண் அரசிலும் கடந்த காலத்தை விட இவரன் வலு கூடிய நிலையிலேயே அமைந்திருக்கிறது.

இப்படியான ஓர் அரிய வாய்ப்பு இப்போது அவர்க்குக் கிட்டியுள்ளது. அவரின் அறுபதாண்டு மக்கள் தொண்டு என்பது தி.மு.கழகத்தின் கட்சி வரலாறாக அல்லாமல் தமிழின மேம்பாட்டிற்கான வரலாறாகவும் இணைக்கப் பெற வேண்டும் என்பது நம் பாவலரேறு ஐயா அவர்களின் வலிய கருத்தாகவே இருந்து வந்தது.

கலைஞர் முன் உள்ள பெரும் பணிகளாக ஐயா அவர்கள் கடந்த முறை (89-ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில்) எழுதிய எழுத்துகள் இன்று மீண்டும் எடுத்துக் கூற வேண்டிய அழுத்தம் கொண்டதாக அமைந்துள்ளது.

"இன்றைய நிலையில் தமிழினத்துக்குச் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளுள் கீழ்வரும் மூன்று பெரும் பணிகள் மிக மிக இன்றியமையாதனவாகும். ஒன்று, இந்தி தடுப்பு இரண்டு, தமிழீழ அமைப்பு. மூன்று, தமிழின உணர்வு மீட்பு-ஆகியவை."

- என்று ஐயா அவர்கள் விரித்து அச் செய்திகளை எழுதியுள்ளார்.

இதில் தமிழீழ அமைப்பு என்பது இன்றைய சூழலின் மிக மிக த்தேவையான ஒன்றாகவே இருக்கிறது.

தம்முடைய மிகப்பெரும் கட்சி வலுவாலும், அரசுக்கட்டிலின் வலுவாலும் கலைஞர் இதற்கான அடித்தளத்தை அமைத்தே ஆகவேண்டிய கடன் அவரிடம் உள்ளது.

அதைச் செய்கிறபடி காலச்சூழலும், அரசியல் திறனறிவும் இன்றைய தேர்தல்கள் அரசியலாளர் பிறர் எவரிடமும் இருப்பதாக நாம் கருதிடவில்லை.

இன்றைக்குத் தமிழீழத்தின் சிக்கல் கடும் சிக்கலாக அமைந்துள்ளது. இறுதிப் போரை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தச் சூழலில் சிங்கள அரசு முழுமையாக அமெரிக்கப் பின்னணியில் தமிழக மக்களைச் சுட்டுத் தள்ளியும், விரட்டி அடிக்கவும் செய்கிறது. ஏதிலிமக்கள் தமிழகம் நோக்கி வந்து கொண்டே இருக்கின்றனர்.

"தமிழீழ மக்களின் விருப்பத்திற்கேற்பதான அரசியல் தீர்வு மேற்கொள்ளப்பெறும்"-என்று கலைஞர் அவர்கள் அடிக்கடிக் குறிப்பதுபோல், அம்மக்களின் விருப்பம் தமிழீழம் என்கிற வகையில் இருக்கிற போது, அதற்கான அரசியல் தீர்வை நெருங்க வேண்டியதும், தில்லி அரசின் துணையோடு சிங்களஅரசை நெருக்க வேண்டியதும், இன்றைக்குக் கலைஞரை முதலமைச்சராய் ஏற்றிருக்கிற தமிழகத்தின் கடனாக உள்ளது.

"இலங்கைத் தமிழருக்குத் தமிழீழம் ஓர் இன்றியமையாத கொள்கை, நோக்கம்! தமீழீழம் இல்லாமல் இலங்கைத் தமிழர் உயிர் வாழவே முடியாது. தமிழர்களிடத்தில் ஓர் அமைதியை உருவாக்கவே முடியாது.அது பற்றிக் கலைஞருக்கு மிக நன்றாகவே தெரியும்." என்று அன்றைக்குப் பாவலரேறு ஐயா அவர்கள் வலிந்து கூறியது இன்று மீண்டும் கலைஞர் எண்ண வேண்டியது.

தம் வாழ்வின் இறுதியில் அவர் பெற்றிருக்கிற இத்தகு ஆற்றலான பொறுப்பு-அவர்தம் தமிழர் நல உணர்வை வெளிப்படுத்தி - செயல்படுத்திக் காட்டுவதற்கானதாய் அமைந்திட வேண்டும் என்றே நாம் அக்கறையுடன் கூறுகிறோம்.

மாறாய் அது தேர்தல் அரசியல் களத்தில் நாடகங்களாகவே அமைந்திடுமானால் கலைஞர் அவர்களுக்கு மட்டும் அன்று தமிழகத்திற்கே பெரும் இழப்பாய்ப் போய்விடும் எனக்கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

- தாமரை பெருஞ்சித்திரனார்

போலியும் மாற்றும்

பரவலாகப் பயன்பட்டுவரும் ஒரு பொருளைப் போலவே வடிவம் கொண்ட இன்னொரு பொருள், அதன் பயன் நிலையில் குறைந்தோ - பயன் இல்லாமலோ இருந்தால் அப் பொருளை முதல் பொருளின் போலி என்கிறோம்.

ஒரு பொருளுக்கு இரு பண்புகளாகப் புறவடிவத்தையும் அதன் பயனையும் எடுத்துக் கொள்வோமானால், சில பொருள்களைப் புற வடிவத்திற்காக மட்டும் மதித்திருப்போம். சில பொருள்களை அதன் பயனிற்காக மட்டுமே மதித்தி ருப்போம்.

பயனுள்ள ஒரு பொருள் எந்த வடிவில் இருந்தாலும் மதிப்பதுண்டு. அழகுக்கென்றே உள்ள ஒரு பொருள் பயனில்லையென்றாலும் அதை மதிப்பதுண்டு.

அடுத்து சில பொருள்கள் அரிதாகவே கிடைக்கும். அதைவிடவும் தேவை அதிகமாகவே கிடைக்கும். அப் பொருள்களை ஈடுகட்ட மாற்றுப் பொருள் கிடைத்தால் தேவை என உருவாக்க வேண்டியிருக்கும். பயன் அடிப்படையில் சற்றுக் குறைவாக இருப்பினும் அப் பொருளை வேறு வகையில் உருவாக்க முடியுமா என்று கண்டு பிடிப்பதுண்டு. அப்பொருள் தன் வடிவத்தில் மாறலாம். பயன் மட்டும் கிடைப்பின் போதும். அவைதான் மாற்றுப்பொருள்.

வடிவத்தில் ஒத்திருந்து எதிர்பார்த்த பயனைத் தராதது போலி. வடிவத்தில் ஒத்தில்லாமல் இருப்பினும் மூலப்பொருளின் பயனை ஓரளவேனும் முழுதேனும் தர முன்வருவது மாற்று.

அவ்வாறு தேவை மிகுதியாக இருந்தும் அதன் உருவாக்கம் குறைவாக இருப்பதால் மாற்று பொருள் கண்டு பிடிப்பின் தேவை அதிகமாக இருக்கும் ஒரு பொருள் கன்னெய் (Petrol).

தேக்கிவைத்து, தேவையின்போது பயன்படதக்க ஆற்றல் தரும் எரிபொருள் களில் எளிதானதும் கழிவு குறைவானதுமான எரிபொருள் கன்னெய். petro- பாறை -olium - நெய்மம் என்ற பொருட்பெயருடைய இவ் எரிநெய் புதையுண்ட பெரும் மலைப்பாறைகளுக்கடியில் கிடைக்கக் கூடியது.

நீர்மக்கரி (hydro carbon) வகையைச் சார்ந்த கலவையான இக் கன்னெய் தோன்றிய வகையே வியப்பானதாகும். நீர்மப் பசுந்தழைகளும் விலங்குகளும் அழிந்து புதையுண்டு மண்ணோடு மண்ணாகி, படிவுகளாகப் படிந்து பாறைகளாகப் புதையுண்டு போன பல இலக்க ஆண்டுகளுக் குப்பின் இக் கலவைப் பாறைகள் மழைநீரினாலும் நிலத்தடி நீராலும் சிதைவுற்று அதன் கரிமப்பொருட்களுடன் மென்மைபெற்று நிலவெப் பநிலையில் பாய்மமாகத் (Fluid) தேக்கம் பெறுகிறது. ஆங்காங்குள்ள

பாய்மத்தேக்கங்கள் சேர்ந்து பெருந்தேக்க நிலையில் நெய்மப்புலமாக உருவாகியது. இந்த நெய்மப்புலத்தொகுதியே கன்னெய்புலம். இப் புலத்திலிருந்து எடுக்கப்பெற்ற நெய்மமே கன்னெய்யின் மூலப்பொருள்.

கன்னெய்யில் நீர்மக்கரி (hydro carbon), கரிக்கலவை, எரியம்(sulphur), உயிர்வளியம் (oxygen) போன்ற பொருள்கள் இருக்கின்றன. பெரும்பாலும் அனைத்து எரிபொருள்களும் கரி அல்லது நீர்மக்கரி வகையைச் சார்ந்தன.

இக் காலத்தில் எரிபொருளை இயங்கு ஆற்றலாகக் செய்யும் பொறிகளில் முன்னேற்றமான உள்ளெரி பொறி (Internal combusion Engine) ஆகும். நீராவிப் பொறிகள் செலவுமிக்கதும், கழிவு மிகுதியாக வெளியேற்றப்படுவதும் மாசுபடுத்துவதுமான பொறியாக இருப்பதால் இதனினும் எரிபொருள் சிக்கனமும் மாசுகுறைவானதுமான கன்னெய்யைப் பயன்படுத்தும் உள்ளெரி பொறிகள் முன்னேற்றமாக உள்ளன. உள்ளெரி பொறிகள் கண்டுப்பிடித்து நாற்பது ஆண்டுகளாயினும் அதை அதனினும் முன்னேற்ற வாய்ப்பில்லை. எனவே உள்ளெரி பொறி தவிர்த்த வேறு பொறி காணும் வரை, உள்ளெரி பொறியின் எரிபொருளான கன்னெய் வகை எரிபொருள்களை விட்டால் வழியில்லை என்ற நிலை உருவாகிவிட்டது.

உலகில் கன்னெய்யின் இன்றைய மொத்த இருப்பு எவ்வளவு என்பது முடிவாகியுள்ளது. மிஞ்சிப்போனால்-இதே தேவை நீடித்தால் முப்பது ஆண்டுகட்குப் போதுமான கன்னெய் இருப்பே உலகில் உள்ளது.

இப்போது ஒரு பதினத்திற்கு ஓர் உருபாய் ஏற்றினாலும் மற்ற பொருள்களின் விலைக் குறியீடு மிகுதியாக ஏறிவிடும். இந் நிலையில் கன்னெய் அறவே இல்லை எனின் உலகின் முன்னேற்றத்தைப் பின்னோக்கி இழுக்கும் நிலைகள் மிகுதியாக ஏற்பட்டு விடும். எனவே இதற்கு மாற்று கண்டுபிடிக்க வேண்டிய தேவை இப்போதைய நிலையில் இன்றியமையாதது. ஏனெனில் இப்போது நாம் பயன்படுத்தும் கன்னெய் 225,000,000 ஆண்டுகளுக்கு முன் உயிர்த்திருந்தப் பசுந்தழை மற்றும் விலங்குடற் சாரங்களாகும். அது தீர்ந்த பின் நாம் காத்திருக்க வாய்ப்பில்லை. உடனடியாகத் தழைகளிருந்தோ எந்த நிலையிலிருந்தோ நாம் மாற்று கன்னெய் பெற வேண்டியது முகாமையானது. பழங்களைக்கூட முன்கூட்டியே விரைவில் பழுக்கச்செய்யும் இக்காலத்தில் கன்னெய்யை உடனடியாக உருவாக்க ஆய்வுகள் மிகவும் தேவையானது.

உலக முன்னேற்றத்திற்கு மின்சாரம் எவ்வாறு தேவைபடுகிறதோ அதே போன்று கன்னெய்யும் தேவைப் பொருளாகி விட்டது. உலகில் வாழும் மாந்தனும் எவ்வழியிலாவது அதன் பயனை நுகர்ந்தே ஆக வேண்டும் என்கின்ற நிலை உருவாகி விட்டது. இல்லெனில் மீண்டும் கட்டை வண்டியியக்கம் போன்ற தசையாற்றலை (muscular energy) நம்பிச்செல்ல வேண்டியதுதான். இக் கன்னெய்க்குப் பகரமாக பல்வேறு முயற்சிகள் ஆயப்பட்டு வருகின்றன.

இம் முயற்சிகளில் ஏற்றத்தாழ்வு மிகுந்த இவ் விந்திய நாட்டில் பல்வேறு சுரண்டல்களைப்(கன்னெய் சுரண்டல் உட்பட) பெற்றுக் கொண்டு ஒட்டாண்டியாக்கப்படும் மாநிலமான தமிழ்நாட்டில்- சாதியமைப்புகளால் அழுத்தப்பட்ட பிரிவில்-விரும்பிய கல்வியை விலைக்கொடுத்து வாங்க முடியாத நிலையில் பொருளியல் காரணமாகக் குறைந்த கல்வி பெற்றவரான இராமர் என்ற இளைஞர் கண்டுபிடித்த ஓர் அறிவியல் செய்முறைதான் “பச்சிலைக் கன்னெய்”! இச் செய்முறையை அறிவியல் படுத்தக்கூட போது மான அறிவியல் கல்வி அவர் பெற்றவர் அல்லர்.

அவரின் ஆக்கமுறையான இச் செயல்முறையை அக்கறையுடன் அறிவியல் படுத்தி அவருக்குப் பெருமையும், நலனும் ஏற்படும் வகையில் தூக்கிவிடுவதன் வழி நாட்டுக்கும் நலன் சேர்ப்பதுதான் இந்நாட்டு அறிவியல் அறிஞர்களின் கடமையாகும்.

அதை விடுத்து இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணிசெய்யும் அறிவியல் அறிஞர்களுக்கிடையில் பல்லாயிரக் கணக்கில் ஊதியம் மட்டுமே பெற்றுக்கொண்டு ஓர் ஆய்வுப்பயனும் விளைவிக்காமல் மலட்டு அறிவியலறிஞர்களாகத் திகழும் ஒரு சிலர் அவரைப் புண்படுத்துவதும் கிண்டல் செய்வதும் தேவையற்றது.

உலகில் பெரும் பெரும் அறிவியல் கண்டுபிடிப்புகள் பல தற்செயல் நேர்ச்சியாகக் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை உணர வேண்டும் .அவ்வாறு கண்டுபிடித்த அறிஞருக்கெல்லாம் பெருமை நேர்மையான முறையில் கிடைத்துள்ளது.

இவ்வாறு அறிவியல் அறிஞர்களின் எள்ளல்போக்கு ஒருபுறம்;விலைக்கு வாங்கிட வேண்டும் என்ற அரசியல் தலைவர்களின் கொடுமைப்படுத் தங்கள் ஒருபுறம்; பன்னாட்டு வணிகர் விலைக்கு வாங்குவது அல்லது தீர்த்து விடுவது என்ற முயற்சிகள் ஒருபுறம்;இத்தனைக்கு நடுவில் திண்ணெஞ் சராய் இராமர் நிற்பதே ஒரு தனிமாந்தர் செய்ய இயலாத கடுஞ்செயலாகும்.

இக் கண்டுபிடிப்பை வைத்து இராமர் தன் வறுமை நிலையைப் போக் கிகொள்கிறார் என்பதும் வெளிப்படை. உலகியல் நிலையில் இதை மிகவும் பேராசை என்றும் கூறிவிட முடியாது. ஏதோ ஓர் அரிய - தனக்கு மட்டுமே தெரிந்த மரப்பசையை வைத்துக் கொண்டு அதைப் பதப்படுத்தி ஓர் ஏழைக் குடியானவர் அமெரிக்காவில் சவைக்கும் பசை (Chewing Gum) செய்து மிகப் பெரும் செல்வர் ஆக வில்லையா? மக்களுக்குப் பயன்படாத - பழக்கவயப்படும் ஒரு பொருளைக் கண்டதற்கே காப்புறுதிகள் தரப்படும்போது, ஓர் அரிய - மக்களுக்குப் பயனான - ஒரு நாட்டின் பொருளியலையே தூக்கி நிறுத்தும் பொருளை ஆய்பவர்களை ஊக்கும் கடன் அரசிற்கும் - அறிவியல் அறிஞர்களுக்கும் உரியதன்றோ?

- பூங்குன்றன்

தமிழா - தமிழ்களா?

- தமிழநம்பி

தமிழைத் 'தமிழ்' - என்று குறிப்பிட முடியாது; 'தமிழ்கள்' - என்றுதான் குறிப்பிட வேண்டும் என்று அறிஞர் அ. மார்க்சு அவர்கள் நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாகத் தென்மொழி சுவடி. 28, ஓலை 9 ஆம் இதழ் மக்களவையில் அன்பர் ஒருவர் மடல் எழுதியிருந்தார்.

தொடர்ந்து அவர்க்கு விடை எழுத வந்த அ. மார்க்சு அவர்கள், 'தமிழ்கள்' - என்று சொல்லப்பெறுவது சரியே என்கிற படியாகத் தென்மொழியில் எழுதியுள்ளார்.

அவர் தமிழ்கள் - என்று சொல்லப் பெற வேண்டும் என்பதற்குக் காரணங்களாகக் கீழுள்ளவற்றைக் குறிப்பிடுகிறார்:

- தமிழ், மலைத்தமிழ் - கூலித்தமிழ் என்றெல்லாம் புத்தகங்கள் வந்துள்ளன.
- செந்தமிழ், கொடுந்தமிழ் என்பது தொல்காப்பிய மரபு.
- எனவே, 'தமிழ்கள்' - எனச் சொல்வதற்கு எதற்குச் சினங் கொள்ள வேண்டும் - என்கிறார்.

- ஆனால் அ. மார்க்சு போன்றோர் இதை மட்டும் காரணங்களாக வைத்து 'தமிழ்கள்' - எனப் பொதுப்படக் கூறிவிடவில்லை.

அவர் போன்றவர்கள் கொண்டிருக்கிற அரசியலின் காரணத்தினாலும் அவ்வாறு கூறுகின்றனர் எனத் தெரிகிறது.

குமுக மாற்றம் குறித்து - முன் சான்றாளர்களைத் தேடித் தேடிக் கடந்த அறுபதாண்டுகளாகத் தமிழகப் பொதுவுடைமைக் கட்சிகளும், சிந்தனையாளர்களும் காலத்தை இழந்ததே உண்மை. காலத்தை இழந்தது மட்டும் அல்லாமல் ஒவ்வொரு சூழலிலும் தமிழக முற்போக்குச் சிந்தனைகளையும் பின்னுக்கு இழுப்பதே இவர்களின் அறிவு வாழ்க்கையின் வழமையாகப் போய்விட்டது.

'உருசியாவில் மழை பொழிந்தால், தமிழகத்தில் குடை பிடிப்பார்கள்' - என்பது அவர்களின் நடைமுறையைக் குறிப்பாய் விளக்கும் மொழியாகவே இருந்தது.

உருசியாவை முன் சான்று (மாதிரி) என்றும், பின் சீனப்புரட்சியை முன்சான்று என்றும், அதன்பின் வியட்நாம், க்யூபா என்று ஒவ்வொரு நாட்டிலும் புரட்சி நடக்கிற போதெல்லாம் அந்த நாட்டுப் புரட்சிகளின் வரிப்புலி எழுச்சியை தன்னுடம்புகளிலும் போட்டுக் கொண்டு பூனைகளாய் உலவியே தமிழகத்தின் எழுச்சியைப் பின்னுக்கு

இழுத்தவர்கள் இந்தப் போலியர்கள்.

அத்தகைய நடைமுறை இன்னமும் அமைந்துவிடவில்லை. மக்கள் விடுதலைக்கு முற்றும் மாறாக - இம் மக்களைப் பிரித்தாளும் அரசக் கட்டமைப்பை வீழ்த்தி உழைக்கும் மக்களின் அரசை நிறுவவும், தொடர்ந்து பொதுமைக் குமுக அமைப்பை உருவாக்கவுமான புரட்சிக்கு வழி தேடுவதாய்க் கூறிக் கொண்டே மேற் கூறிய பாதையை இங்குப் போட்டுக் காட்டுகிறார்கள்.

தமிழக மக்களின் குமுக வாழ்க்கையின் முரண்கள் எவை எவை - என்ன என்ன சிக்கல்கள் இங்கு நிலவுகின்றன என்பது குறித்து அவர்கள் அக்கறை கொள்ளுவதில்லை. குதிரைக்குக் 'குர்ரம்' - என்றால் ஆனைக்கு 'அர்ரம்' - என்று முரண்டு பிடிக்கும் செயல் வகைப்பாட்டையே மேற்கொண்டனர்.

அவ்வகைக் கட்சியினர் மேற்கொண்ட குருட்டுத் தனமான இயங்கா நிலைப் போக்கே, குமுக அறிவியலுக்கு மாறான வழியின் தொடர்ச்சியே இன்றைக்கு அ.மார்க்சு போன்றோர் முன் நிறுத்துகிற நடைமுறைக்கான அரசியல்.

வெளி நாடுகளின் மூலைகளிலிருந்து எழுப்பப்படும் இவர்கள் போன்றோர்கள் அவ்வெளிநாட்டாரின் சூழல்களில், அவர்கள் எழுப்புகிற குரல்களைத் தொகுத்துக் கேள்விகளாக்கி, அக் கேள்விகளுக்கு ஏற்ப இங்குள்ள குமுக மாற்றத்திற்கான ஒருமையை மேலும் பிரித்துப் பன்முகப் படுத்துகிற திட்டமே அ. மார்க்சு போன்றோர்களின் செயல்திட்டம்.

அவர்கள் முன் வைப்பதாகக் கீழ் உள்ளவற்றைக் குறிக்கலாம்.

- அமைப்பாய்ச் சிந்திப்பதை மறுப்பது.

- தேசியம், மொழிப்பற்று, ஒழுக்கம் - இவற்றையெல்லாம் கற்பிதம் அதாவது கற்பனை என்றும் அவை அனைத்து வெறித்தனமாகவே (Facism) மாறக்கூடியவை - என்பது,

- எதையும் ஒருமுகப்படுத்துவதை - அதாவது பொதுப்படத் தொகுத்து எண்ணுவதை மறுத்து - அனைத்தையும் பன்முகப்படுத்துவது. அதன்படி தொகுத்து வெளிப்படுகிற எதையும் சிதைத்துக் கூறுகளாக்கி அமைப்புவழி அணிதிரட்டலுக்குட்படுவதை மறுப்பது.

- போன்றதான அரசியலை முன்வைத்து வலியுறுத்துகின்றனர்.

இவ் வலியுறுத்தத்தின் அடிப்படையில்தான் 'தமிழ்' - என்று பொதுமைப்படுத்துவது தவறு என்றும் 'தமிழ்கள்' என்று பன்முகமாய்ப் பிரிப்பதே சரி என்றும் கூறுகின்றனர்.

அவ்வாறு 'தமிழ்கள்' - என்று கூற வேண்டுவதற்கான வாய்ப்பாகத் தந்தை பெரியார் அவர்களின் மொழி பற்றியதான கருத்துகளைச்

சுட்டிக்காட்டித் தன்வயப்படுத்திக் கொள்கின்றனர். மேலும் அவற்றைத் தங்கள் அரசியலுக்கேற்ப வடிவமைத்துக் கொள்கின்றனர்.

முதலில் மொழி - என்பது மற்ற சிந்தனை, மெய்ம்மம் (தத்துவம்), பண்பாடு போன்று தன்னளவிலே ஓர் அடையாளத்தைக் கொண்டிருப்பதில்லை.

சிந்தனையோ, மெய்ம்மமோ, பண்பாடோ அது வெளிப்பட்டிருப்பதிலேயே - அதுவே வகுப்பு (வர்க்க), குமுகப் பின்னணிகளைக் கொண்டதாக இருக்கும். ஆனால் மொழி அத் தன்மையினதாக இருந்திடாது.

மொழி - அம் மொழியில் வெளிப்படுத்தப்படுகிற கருத்துகளின் அடிப்படையில் பொருள் பெறுமே அல்லாமல்; ஒரு மொழியே பொருள் பெறுவதாய் இருந்திட இயலாது.

அரசு தன் கருத்தை வெளிப்படுத்துவதும், அவ் அரசை எதிர்த்துப் போராடுகிறவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதும் ஒரே மொழிதான்.

எந்த ஒரு கருத்துக்கும் மொழி சார்புபடுவது இல்லை. எந்த ஒரு மொழியும் எல்லாவகைக் கருத்தையும் வெளிப்படுத்துகிற வகையில் வளமுறுகிறபடி அம் மக்கள் குமுக வளர்ச்சியால் வளப்படுத்தப் பெறுகிறது.

ஆக - எந்த ஒரு மொழியையும் தனித்து - ஒரு புரட்சி மொழி என்றும் கறைபடிந்த மொழி என்றும் கூறிட முடியாது. வேண்டுமானால் அம் மொழி வழங்கும் குமுகம் மதக் கறைபடிந்ததாக இருப்பதாகக் கூறலாம்.

'சோதிடம்' - இன்று கணிப்பொறியிலும் நடைமுறையில் உள்ளது என்பதற்காக - 'கணிப்பொறி'யே மூடநம்பிக்கை கறை படிந்துவிட்டது என்பது குருட்டுப் பார்வையாகிவிடாதா?

ஆங்கில மொழி மத நீக்கம் (Secularisation) செய்யப்பட்டு மேலைச் சூழலில் இருப்பதாகக் கூறும் இவர்கள், தமிழ் மொழி இந்து மதத்தாலும், சைவத்தாலும் தூய்மை செய்திட முடியாதபடி கறைபடிந்து போனதாகத் தந்தை பெரியார் கூறுவதைச் சரியானது என்று கூறிக் கொள்கின்றனர்.

வல்லாளுமைத் தன்மையில் அறிவியல் ஒரு பக்கம் வளர்ந்திருந்தாலும் கிருத்துவ மதவியல் அழுத்தங்களும், மூடநம்பிக்கைகளும் இன்னமும் ஆங்கிலேயர்களிடமும், மத உணர்ச்சி பிற மேலை நாட்டவர்களிடமும் எவ்வாறு அற்றுப் போய்விட்டது என்று கூறுகிறார்கள் எனப்புரியவில்லை. அவ்வாறு அற்றுப்

போகாதவர்களின் பயன்பாட்டில் உள்ள ஆங்கிலமும், பிற மேலை மொழிகளும் மத நீக்கம் செய்யப்பட்டன என்பதும் எவ்வாறு என விளங்கவில்லை.

'இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்கோ, தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல என்பதைத் தோழர்கள் உணர வேண்டும். மற்றெதற்கு என்றால் ஆங்கிலமே பொதுமொழியாக அரசாங்க மொழியாக, தமிழ் நாட்டு மொழியாக, தமிழன் வீட்டு மொழியாக ஆக வேண்டும் என்பதற்காகவே யாகும்.'

- என்றும்,

'உயர்தரப் படிப்புகளையெல்லாம் கல்லூரியிலும் கூட தமிழிலேயே ஆக்குகிறோம் என்றால் மக்களை முட்டாள்களாக்குகிறோம்'

- என்பது போன்றும் ஆங்கிலத்தை வரவேற்றுத் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்ட செய்திகளையெல்லாம் -

'வந்தேறிகளின் அடிமைப்படுத்த நீக்கம் (Decolonisation) என்கிற முழக்கம் உலகெங்கிலும் ஒடுக்கப்பட்ட மக்களால் எழுப்பப்படும் ஒரு காலக் கட்டத்தில், உள் நாட்டு ஆளுமைக் கெதிராக வெளிநாட்டு ஆளுமையைத் தந்திர அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது ஐயமே. உள்நாட்டு ஆளுமையின் வெளிப்பாடு வடமொழிப் பண்பாடு என்றால், உலக அளவிலான ஆளுமையின் வெளிப்பாடு ஐரோப்பிய, அமெரிக்கப் பண்பாடு'

- என்று பெரியாரின் கருத்தை மறுத்துரைக்கும் அ. மார்க்சு போன்றோர் சமற்கிருத ஆளுமையை முழுமைப்பட உணர்ந்து எதிர்க்கவில்லை.

தமிழில் ஆங்கிலப் பயன்படுத்தம் - வல்லரசின் ஆளுமையில் ஏற்பட்டது - என்கிற வகையில் ஆங்கில வழிக் கல்வியை மறுக்க வேண்டுவது சரி என்றால்; சமற்கிருதமும் - ஆரியப் பார்ப்பனப் பண்பியல், மதவியல் ஆளுமையால் ஏற்பட்டது என்கிறவகையில் அவ்வாளுமையை அனைத்து வகையிலும் எதிர்ப்பதுதானே சரி.

மாறாகக் கறைபடிந்து போய்விட்டது - அதைத் தூய்மை செய்திட முடியாது என்பது எவ்வாறு? இன்றைக்குத் தமிழில் பயன்பாட்டில் இருக்கிற மதவியல், மூட நம்பிக்கைச் சொற்களில் தொண்ணூறு விழுக்காடு சமற்கிருதச் சொற்களாக அல்லவா உள்ளன.

'விசேஷம், தீர்த்தம், கீர்த்தி, மூர்த்தி, நரகம், மோட்சம், புண்ணியம், பாவம், அக்கிரமம், நாத்திகர், ஆத்திகர், யாகர், பக்தி, ஸ்தலம், அபிஷேகம், சர்வ மயம், ஸ்திரி, அஞ்ஞானம், விஞ்ஞானம், சம்பவம், சிருஷ்டி, பிரமோக்ஷனம், பரிக்ஷை, லோகம், சத்குரு, வேதம், சாஸ்திரம், நீச-தேவபாஷை, துவேஷம், யாத்ரா, ஜன்மம், ஜீவன், பண்டிகை, சித்திரை முதல் பங்குனி, ஏகாதசி, துவாதசி, அமாவாசை, பௌர்ணமி...'

- இவை போன்ற நூற்றுக் கணக்கான சொற்கள் சமற்கிருதம் தாமே.

இவை எவற்றிலும் ஒரு சொல்லேனும் கழகக் காலங்களில் பயன்பாட்டில் இல்லையே.

தமிழில் கலக்கப்பட்டிருக்கிற பிறமொழிச் சொற்கள் அவ்வவ்மொழிச் சார்ந்த மதவியல், மெய்யியல், அரசியல், ஆளுமையியல் தன்மையில் கலக்கப் பெற்றவையே.

வாழ்க்கைப் பண்பியலிலே, பெயர்ச் சொற்களே சமற்கிருதச் சொற்களாகக் கலக்கப் பெற்றவை.

அவை அனைத்தும் இங்கு ஆண்டைகளாக இருந்த - இருக்கிற, ஆரியப்பார்ப்பன, ஆங்கிலேய மற்றும் பிறரின் ஆளுமையினால் கலக்கப் பெற்றவையே அல்லாமல் - இங்குள்ள மக்களே கலந்து கொண்டவை அல்ல.

அரசக் கட்டமைப்பின் பணியாளர்களாகப் பணியாற்றிய ஆளுமைச் சாதியரும் இடைநிலைச் சாதியினருமே அந்த ஆண்டைகளின் சொல் வழக்குகளைக் கூடுதலாகப் பயன் படுத்தினார்களே அல்லாமல் அடிப்படை ஏழைத் தமிழ் மக்கள் அவ்வாறு பயன்படுத்தியவர்கள் அல்லர்.

‘ஏகாதிபத்தியம், பிரதானம், சமதர்மம், நீதி, அக்ராசேனர், காரியதரிசி, பிரச்சாரம், கமிஷன், வர்க்கம், ராஜன், அராஜகம், பிரத்யேகம், சுயநிர்ணயம், ஜீவனோபாயம், ஸ்தாபனம், ஜில்லா, சர்க்கார், சர்வாதிகாரி, பிரளயம், பிரசங்கி, பூர்ஷ்வா, கோஷம்...’

- போன்ற நூற்றுக் கணக்கானச் சொற்கள் ஆரியப் பார்ப்பன, ஆங்கில வல்லரசிய ஆளுமையிலும், அதற்கெதிராகப் புரட்சியை முன்னெடுப்பதாகக் கூறிக் கொண்ட பார்ப்பனச் சாதியராலுமே முன் மொழியப் பெற்று வலியத் திணிக்கப்பெற்றவை அல்லாமல் வேறென்ன?

ஆனால் - இவ் வகைச் சொற்களில் பெரும்பான்மைச் சொற்களுக்கு என்ன பொருள் என்றே தெரியாமல் வாழ்கின்ற தமிழகச் சிற்றூர்ப்புற அடிப்படை மக்களின் மொழியான தூய தமிழ் மொழி கறை படிந்த மொழி என்று கூறுவது முழுமையாய்ப் பொய்யானதே.

‘சாதம், ஜலம், நிஜம், ஷேமம், இஷ்டம், நமஸ்காரம், சமுத்திரம், பந்தம், கஷ்டம், பைசா... - இப்படியாக வாழ்நிலைப் பண்புச் சொற்கள்கூட ஆளுமையர்களின் மொழிகளில், அவ்வாளுமையர்களால் திணிக்கப்பட்ட போதும் அடிப்படைத் தமிழ் மக்கள், ‘சோறு, தண்ணீர், மெய்(யாலுமே), நல்ல(படியாக), விருப்பம், வணக்கம், கடல், உறவு (உறவுமுறை > உரம்பரை), நொந்து (போவது) காசு - என்பதாகத் தமிழ்ச் சொற்களைப்

பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவில்லையே.

பார்ப்பானுக்கு மதவியல் கருத்துகளில் அடிபணிந்து போன தமிழக மேல் சாதியரும், திருமணம் செய்து கொள்வது போன்ற எந்த நிகழ்வுகளுக்கும் - பிற அரசியலுக்கும் பார்ப்பானிடம் அடிபணிந்துபோன இடைநிலைச் சாதியரும்தாம் அவ்வாளுமை மொழியின் வழக்குகளைக் கடைப்பிடிக்கலானார்களே அல்லாமல் தமிழகச் சிற்றூர்ப் புறங்களில் வாழ்கிற மிகப் பெரும்பான்மை மக்கள் அவற்றுக்கெல்லாம் அடிபணிந்து போய்விடவில்லை.

அந்த ஆண்டைகளின் நலனுக்கான தொழிலுருவாக்கமும், இன்றைய கல்வியும், மக்களை மீண்டும் மீண்டும் அனைத்து வகையிலும் அடிமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு, தமிழ் மொழியிலும் தங்களின் ஆண்டைமொழிக் கலப்புத் தனத்தையே செயலாக்குகின்றன.

இந்தச் சூழல்களில் தமிழக மக்களுக்கு இருபெரும் கடமைகள் உண்டு.

ஒன்று - அந்த ஆண்டைகளின் ஆளுமைக் கருத்துகளை, செயல்களை, சுரண்டல்களை மறுப்பதும் - எதிர்த்துப் போராடுவதும்.

மற்றொன்று - அக் கருத்துகள், செயல்கள் பரப்பப்படுகின்ற அவர்களின் மொழியால் கலப்புற்ற கலப்புத் தமிழைக் கடிந்து ஒதுக்குவதும் ஆகும்.

அவ்வகையில் நாம் பெற விரும்புவது - சாதியற்ற, மதக் கருத்துகளைப் பரப்புகிற உரிமையற்ற, சமநிலைக் குமுக வாழ்க்கைப் பண்பியலை உயர்த்துகிற உழைக்கும் தமிழக மக்களின் அரசமைப்பு.

அதற்கான அணிதிரட்சிக்கு மொழி ஓர் அடிப்படை ஊடகமாக இருக்கிறது.

அம்மொழி தமிழகப் பண்பியலை, அரசியலை, வரலாற்றை, பொருளியலை, பின்னிப் பிணைத்திருக்கிற ஊடகமாகவும் இருக்கிறது.

அவ்வூடகத்தைக் கறைபடிந்ததாகக் காட்டி - பன்முகப்பட்டதாகச் சிதைத்துக் காட்டுவது -இம் மொழியின உழைக்கும் மக்களின் ஒருமையையே சிதைப்பதும், அம் மக்களின் விடுதலை வாழ்க்கையையே கீழறுப்பதும் ஆகும்.

தமிழ் மொழி பல தன்மைகளில் வழக்காறுகளைக் கொண்டுள்ளது உண்மையே. அது தமிழ்மொழி மட்டுமன்று; உலகமொழிகள் அனைத்தும் பலவகை வழக்காறுகளைக் கொண்டதாகவே இருக்கிறது.

மேலும், மொழி மட்டும் அன்று உலகின் அனைத்துப் பொருளும், ஏன் கருத்துகளும் பன்மைத் தன்மைக் கொண்டவையே.

அ.மார்க்சின் கருத்தும், பொ. வேல்சாமியின் கருத்தும், இரவிக்குமாரின் கருத்தும் பன்மைத் தன்மைக் கொண்டவையே.

ஆயினும், அடிப்படையில் அவை ஒருமை நிலையில் பொதுமைப் படுவதால்தான் 'நிறப்பிரிகை' என்கிற கூட்டில் ஒருங்கிணைய முடிகிறது.

ஆக - ஒவ்வொரு பொருளும் கருத்தும், பன்மையும், ஒருமையும் கொண்டவையாகவே இருக்கும்.

ஒருமையின் சிறப்பு பன்மைக்கும், பன்மையின் தேவை ஒருமைக்கும் எனத் தனக்குள்ளாகவே முரண்பட்டு - தகவமைத்துக் கொள்வதின் வழியே அப்பொருள் இக் குமுகப் பயனுடையதாய் அமையும்.

தமிழ் பன்முகப் பயன்பாட்டில் இருப்பினும் ஒருமைபுரிதல் தன்மையைக் கொண்டது. அதுபோலவே அது பேசப்படுகிற மக்களிடையே பன்முக வாழ்க்கை இருப்பினும், ஒரு முகப்பண்பு உள்ளது.

எனவே, அப் பண்பு வாழ்க்கை கொண்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்கு அவர்களின் மீதான ஆளுமைகள் எவையாயினும் - அவற்றை எதிர்த்துப் போராடுவதே தமிழக மக்களின் விடுதலை வாழ்க்கைக்கானதாய் அமையும்.

அதற்கு - பிற ஆண்டைகளின் மதவியல், அரசியல் ஆளுமையை எதிர்த்துத் தமிழர்களில் உள்ள ஆளுமையரின் மதவியல், அரசியல் ஆளுமையை ஏற்பது என்பது பொருள் அல்ல.

ஆங்கில, பிற மேலைய வல்லரசியத்தை இந்திய - இந்து மதக் கருத்துகள் - என்கிற இன்னொரு ஆளுமை எவ்வாறு முழுமையாய் எதிர்த்திட இயலாதோ - அதே போன்று வல்லரசிய, இந்திய, இந்து ஆளுமையை, மதவழிப்பட்ட சைவ அல்லது வைணவக் கருத்துகள் முழுமையாய் எதிர்த்திட இயலாது. அவ்வாறு சைவ, வைணவத்தை மேற்சொன்னவற்றுக்கு எதிராய் நிறுத்த வேண்டும் என எவரும் இங்குக் குறிப்பிடவில்லை.

அவற்றையும் சேர்த்து எதிர்க்கிற அடிப்படை உழைக்கும் தமிழக மக்களின் ஒற்றுமைக்குள்ளானவர்களையே நாம் 'தமிழர்கள்' - என்கிறோம்.

அவ்வகையிலான ஆண்டைப் பண்பியல் அனைத்தையும் எதிர்க்கிற **'தமிழை'**யே - நாம் **'தூயதமிழ்'** என்கிறோம்.

அந்தத் தமிழ் - **தமிழ்** தானே அல்லாமல் **தமிழ்கள்** அல்ல.

மாறாக அத் தமிழை - 'தமிழ்கள்' - எனக் காட்டுவதே மேலை அறிவு வாழ்நர்களுக்கு அடிபணிந்தும், தமிழக ஆண்டைகளின் தேவைக்கெனப் பன்முகப்படுத்தியும் செய்கிற பார்ப்பனியக் கருத்தியல் எனக் கூற நாம் தயங்கிட இயலாது.

‘முத்தமிழ்கள்’

அ.மார்க்சுக்கு ஒரு விளக்கம்!

எழில் - இளங்கோவன்
பொதுச் செயலாளர் - ‘ஆதித் தமிழர் பேரவை’

கடந்த ‘தென்மொழி’ கன்னி (செப்தம்பர் - 96) இதழில், பேராசிரியர் அ.மார்க்சு அவர்கள் பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களைப் பற்றிப் பேசிய பேச்சு ஒன்றுக்கு தன்னிலை விளக்கம் அளித்துக் கூறிய செய்தியில் ‘தமிழ்கள்’ என்று கூறி, அதனைச் சரியென்று நிறுவவும் முயன்றுள்ளதைக் கண்டேன்.

‘முத்தமிழ்கள்’ என்று பெருமையாய்ப் பேசி வருவதாகவும், மலைத்தமிழ் - கூலித்தமிழ் என்றெல்லாம் புத்தகங்கள் வந்துள்ளமையாலும், செந்தமிழ் - கொடுந்தமிழ் எனச் சொல்வது தொல்காப்பிய மரபு என்பதனாலும் ‘தமிழ்கள்’ எனச் சொன்னதற்கு ஏன் சினம் கொள்ள வேண்டும் என்று வினா எழுப்பியுள்ளார் பேராசிரியர்.

ஓர் இனத்துக்கு ஒரு மொழிதான் இருக்க முடியுமே ஒழிய இருமொழிகளோ அல்லது பல மொழிகளோ இருக்க முடியாது. தமிழ் இனத்துக்குத் தமிழ்; கன்னடர் இனத்துக்குக் கன்னடம்; தெலுங்கர் இனத்துக்குத் தெலுங்கு - என்பது தான் சரியே அல்லாமல் ‘தமிழ்கள்’ ‘கன்னடங்கள்’ ‘தெலுங்குகள்’ என்று சொல்வது மரபு இல்லை.

தமிழர்களின் உயர்தனிச் செம்மொழியாய் இருக்கும் ஒரே மொழி தமிழ் மொழிதான். தமிழில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனத் தமிழின் பிரிவுகள் மூன்றாய் இருத்தல் தமிழின் சிறப்புகளுள் ஒன்று. இச்சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மூலம் ‘தமிழ்’ என்பதனால்தான் அறிஞர்பெருமக்கள் தமிழை ‘முத்தமிழ்’ என்று அழைத்தார்களே ஒழிய ‘முத்தமிழ்கள்’ ‘தமிழ்கள்’ என்று ‘கள்’ பன்மை விகுதி கொடுத்து தமிழ்மொழியைச் சிதைக்கத் துணிந்தார் இலர் இன்றுவரை; பேராசிரியர் மார்க்சு அவர்களைத் தவிர!

அடுத்து மலைத்தமிழ், கூலித்தமிழ் என்றெல்லாம் புத்தகங்கள் (புத்தகத் தலைப்பாக இருக்கலாம்) வந்துள்ளன என்பதால் தமிழைத் ‘தமிழ்கள்’ என்று கூறுபோடுவது எவ்வகையில் சரியென்று நமக்குப் புலப்படவில்லை!

மூன்றாவது; செந்தமிழ், கொடுந்தமிழ் என்பது தொல்காப்பிய மரபு என்பதனால் ‘தமிழ்கள்’ என்கிறார் பேராசிரியர். தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியலின் முதல் நூற்பாவின் மூலம் இயற்சொல், திரிசொல், திசைச்சொல் ஆகியவற்றை ‘சொல்’ என்ற வகையில் நிறுத்துகிறார் தொல்காப்பியர்.

‘செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித், தம்பொருள் வழாமை இசைக்குச் சொல்லே’ என்று தொல்காப்பிய எச்சவியல் இரண்டாம்

நூற்பாவும், 'செந்தமிழாகித் திரியாது யார்க்கும், தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்' என்று நன்னூல் சொல்லதிகாரம் பெயரியல் பதினான்காம் நூற்பாவும் இயற்சொல் என்ற சொல்லின் வகையில், செந்தமிழ் என்ன என்பதைத் தெளிவாகச் சுட்டி இருக்கின்றன. செந்தமிழ் (செம்மையான தமிழ்) வழங்கும் நாட்டில் (பகுதியில்) அச் சொல் பொருந்தி பொருள் மாறுபாடு இல்லாமல் இருப்பது 'செந்தமிழ்' என்கின்றன மேற்சொன்ன இரு இலக்கண நூல்களும்.

இனி திசைச் சொல்லை 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும், தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி' (தொல், சொல், எச்சவியல்-4) என்று தொல்காப்பியனாரும், 'செந்தமிழ் நிலம்சேர் பன்னிரு நிலத்தினும்,... தம்குறிப் பினவே திசைச்சொல் என்ப' (நன்னூல், பெயரியல் - 16) என்று பவணந்தி முனிவரும் ஒரே குரலில் சொல்வதை கவனிக்க வேண்டும். அதாவது செந்தமிழ் வழங்கும் நிலத்தைத் தவிர ஏனைய இடங்களில் வழங்கும் சொற்கள் தமிழில் வந்து பயிலும் பொழுது அவை திசைச்சொல் என்று அழைக்கப்படுகின்றது. இதே திசைச் சொற்கள் செந்தமிழ் நிலம் சேர்ந்த தென்பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு, கற்கா நாடு, வேணாடு, பூழிநாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, சீத நாடு, மலைய மானாடு, சோழ நாடு ஆகிய பன்னிரு நிலங்களில் இருந்து வழங்கும் போது அந்தத் திசை(தமிழ்)ச்சொல் 'கொடுந்தமிழ்' என்று அழைக்கப் படுகின்றது.

தொல்காப்பியம் எச்சவியல் 3 ஆம் நூற்பாவும் நன்னூல் பெயரியல் 15 ஆம் நூற்பாவும், இயற்சொல்லில் இருந்து சொல் திரிந்து வேறுபட்டு ஒரு பொருளைத் தருகின்ற பல சொற்களாக ஆகியும், பல பொருள்களைத் தருகின்ற ஒரு சொல்லாக ஆகியும் வருவது 'திரிசொல்' என்கிறது. அது கொண்ட பொதுமை இழந்த தமிழினைக் கொடுந்தமிழ் என்று கூறுகிறார் பேராசிரியர் பொற்கோ அவர்கள்.

இதனை வடித்தெடுத்துச் சொன்னால், செந்தமிழ் நிலத்து வழங்கும் சொல் இயற் சொல்லாகவும், செந்தமிழ் நிலம் சேர்ந்த பன்னிரு நிலங்களில் இருந்து வழங்கும் இயற்சொல் திரிபைக், கொடுந் தமிழாகவும் வரையறை செய்யலாம்.

செம்மை + தமிழ் - செந்தமிழ். (செம்மை குலைந்த பொழுது) கொடுமை + தமிழ் - கொடுந்தமிழ். செம்மை, கொடுமை இரண்டும் பண்பைக் குறிக்க வந்த சொற்கள். ஆனால் தமிழ் என்பது தமிழர்களின் மொழியைக் குறிக்கும் ஒரே பொதுப் பெயர்.

தமிழ் என்ற பொதுப்பெயரை அதன் தன்மையைக் கூறவந்த செம்மை, கொடுமை ஆகிய சொற்களால் பிரித்து 'தமிழ்கள்' என்றும், தமிழின் இயல் இசை கூத்து எனும் சிறப்புப் பிரிவு அல்லது கிளைகளைத் தமிழின் பிரிவுகள் என்று பிரித்து 'முத்தமிழ்கள்' என்று பேச முனைவது அறிவுடையார்க்குப் பொருத்தமாக இருக்காது! பேராசிரியர் அ.மார்க்சு அவர்களின் நல்ல சிந்தனை இதனை ஏற்கும் என நம்புகிறேன்.

தொல்லை 'பிள்ளை'யார்?

பாவலரேறு அவர்கள் இந்து மதக் கொடுமைகளை எடுத்தியம்பி மிகக் கடுமையாகத் தம் பாடல்களிலும் கட்டுரைகளிலும் பேச்சுகளிலும் சாடியிருக்கிறார்.

'......... ....
ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
வாயிலா மக்களாய் வாட்டி வதைக்கும்
கொடுமை மதம்அது! கொடியவர் கூடம்!
கடுமைப் படுகுழி! கயமையின் தொகுப்பு!
சாதி சாதியாய் மக்களைப் பகுத்து
மோதி அழிந்திடச் செய்யும் முள்காடு!
ஒருவன் தாழ்ந்தவன், ஒருவன் உயர்ந்தவன்
ஒருவன் கடவுள், ஒருவன் கீழ்மகன்
என்னும் ஆயிரம் இழிவுகள் செய்யும்
சின்ன மனத்தின் சீழ்உறை புழுக்குளம்!
..........................'

என்று சீறுகிறார் ஒரு பாட்டிலே ('இந்து மதம் எனும் இழி மதம் ஒழிக' - தென்மொழி சுவடி - 12 ஓலை - 12)

'இந்து மதம் கடந்த காலங்களில் மக்களிடையில் எவ்வளவு முன்னேற்றத் தடையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைச் சிறிதே வரலாற்றறிவும் நடுநிலையுமுள்ள எவரும் தெளிவாக உணர்வர். அம் மதத்திற்கே வலிவான அடித்தளங்களாக அமைந்துள்ள புராணங்கள், இதிகாசங்கள் முதலிய மூடநம்பிக்கைகள் மிகுதியும் உள்ள கதைகள் யாவும் பல கோணங்களில் எழுதப் பெறுவதும் நாட்டியம் நாடகம், இசை என்னும் கலைகளில் அவை ஊடுருவி அளாவி நிற்கும் நிகழ்ச்சிகளை, வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றுள் அளவிறந்து புகுத்திப் பொது மக்களின் மனங்களை அவை தம்வயப்படுத்திக் கொள்ளும்படி செய்வதும், அவர்களின் சிந்தனைகளை நாட்டில் நடைபெறும் அரசியல், பொருளியல் வீழ்ச்சிகளிலும், சூழ்ச்சிகளிலும் ஈடுபடாதபடி திசை திருப்பம் பண்ணுவதும், கூர்ந்து நோக்கும் திறனுள்ள நாட்டு நலன் கருதும் நல்லவர்களுக்கு விளங்காமற் போகா. என்று விளக்குகிறார் தன் கட்டுரை ஒன்றில். (தென்மொழி ஆசிரியவுரை - சுவடி. 20 ஓலை. 12 இந்து மதம், இந்தி, இந்தியா, இந்திரா!)

'பிராமண' மதமாகவும் 'வைதீக' மதமாகவும் உள்ள இந்த இந்து மதம் கற்பித்த கரணிய காரியமற்ற மூடத்தனமான - அருவருப்பான - ஏமாற்றுத்தனமான கடவுள்களுள் ஒன்றுதான் பிள்ளையார். இந்த பிள்ளையார் உருவத்தை 'வாதாபி'யிலிருந்து பல்லவமன்னன் தமிழகத்திற்குக் கொண்டுவந்து அறிமுகப்படுத்தினான். தமிழக மக்கள்

(இந்துவாக்கப்பட்டவர்கள்) தங்களுடைய இறைப் பற்றின் கரணியமாக பிள்ளையாருடைய பொருத்தமற்ற உருவத்தையும் அது தோன்றிய அருவருப்பான கதையையும் பொருட்படுத்தாமல் வழமை போல் ஏற்று வணங்கி வந்தனர். இருப்பினும் பிள்ளையார் பிறப்பு எனப்படும் நாளில் களிமண்ணால் செய்யப்பட்ட உருவத்தை வைத்து வணங்கி விட்டு கிணற்றில் போட்டுவிடுவர். ஆனால் இப்போது நடைபெறுவது போல வீதி வீதியாக வைத்திருந்து ஊர்வலமாகச் சென்று கரைப்பதில்லை. இந்தப் பழக்கம் கடந்த சில ஆண்டுகளாகத் தான் இங்கு நடைபெறுகிறது. இதை வடநாட்டிலிருந்து தமிழகத்திற்குப் பரப்பியவர்கள் மார்வாரிகளும் பார்ப்பன ஆர்.எசு.எசு மற்றும் இந்து முன்னணியினரே. தங்களின் சொந்த வணிக நலன்களுக்காக இசுலாமியருக்கெதிராக இந்துக்களிடையே மதவெறி ஊட்டுவதே இந்த சேட்டுகளின் நோக்கமாகும். இவர்கள் தமிழக மக்களிடம் சுரண்டிக் குவித்துள்ள பொருளில் ஒரு பகுதியை இதற்கெனச் செலவு செய்கிறார்கள். இவர்களின் நோக்கத்திற்கு வழக்கம் போல பார்ப்பனக் கூட்டம், பாரதிய சனதா, இந்து முன்னணி, ஆர்.எசு.எசு. என்று பல வடிவங்களில் துணை இருந்து வருகின்றனர். இந்தப் பணத்தைக் கொண்டு அட்டைகள் மரச் சட்டங்கள், வெண் களிமாவு முதலியன கொண்டு உயர உயரமாக பொலிவாகச் செய்து மிகவும் அழகு படுத்தி ஒவ்வொரு வீதியிலும் வைக்கின்றனர். அவ் வீதியில் உள்ள சிலருக்குப் பொருள் கொடுத்து அவ்வுருவத்தைக் காப்பாகப் பார்த்துக் கொள்ள வைக்கின்றனர். மின் விளக்குகள், ஒலி பெருக்கிகள், தோரணங்கள் என்று மிகவும் ஆடம்பரமாக செலவு செய்கின்றனர். அது மட்டுமன்றி ஊர்வலத்தில் கலவரம் நடத்துவதற்கென்று அரம்பர்களையும் பணம் கொடுத்து அமர்த்திக் கொள்கின்றனர் என்பதும் கண்கூடாகத் தெரிகின்றது.

இந்த பிள்ளையார் ஊர்வலத்தை வேண்டுமென்றே இசுலாமியர் வாழுமிடங்கள், பள்ளிவாயில்கள் வழியாக நடத்துவது; தொழுகை நேரமாகப் பார்த்து பள்ளி வாயில்கள் வழியாகச் சென்று அவற்றுக்கெதிரே நின்று கொண்டு பெருத்த ஒலி எழுப்புவது; இப்படி தொல்லை கொடுத்து அவர்களை எரிச்சலூட்டுவது; அதைப் பயன்படுத்தி ஊர்வலத்தினரை அவர்களுக்கெதிராகத் திருப்புவது; இந்துவாக்கப்பட்டுள்ள மக்களிடையே இதன்வழி நச்சுணர்வுகளைத் தங்களின் சொந்த நலன்களுக்காக விதைப்பது என்பவை ஆர்.எசு.எசு. இந்து முன்னணி முதலிய இந்து வெறி அமைப்புகளின் திட்டமாகும். இதே நோக்கில்தான் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆர்.எசு.எசு. அமைப்பை அதன் நிறுவனர் எட்கேவர் தொடங்கியபோது பிள்ளையார் ஊர்வலத்துடன் தொடங்கினார்.

தமிழகத்தில் இலைமறை காயாக இருந்துகொண்டு இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கலவரத்தை நடத்தி வந்த இந்து முன்னணியும்

ஆர்.எசு.எசு.வும் அ.தி.மு.க. ஆட்சிக்காலம் முழுவதும் ஆளுவோரின் - அதிகார வகுப்பினரின் அரவணைப்பில் பேயாட்டம் போட்டன. மண்டைக்காடு போன்ற இடங்களில் கிருத்துவத் தமிழர்களுக் கெதிராக 'இந்து'த் தமிழர்களை மோதவிட்டு, பெருமளவு உயிரிழப்புகளையும் சொத்திழப்புகளையும் ஏற்படுத்தின. 'நாடார்' எனப்படும் பிரிவினரில் ஒரே குடும்பத்தினரில் அல்லது உறவினர்களில் ஒருவர் இந்து மதத்திலும் மற்றவர் கிருத்துவ மதத்திலும் இருப்பர். ஆனால் இவர்கள் தங்களுக்குள்ளேயே கொலை வெறித் தாக்குதல் நடத்திக் கொள்ளும் அளவுக்கு ஆர்.எசு.எசு.வும் இந்து முன்னணியும் மதவெறி ஊட்டின.

கடந்த சில ஆண்டுகளாக சென்னை போன்ற நகரங்களில் நடத்தப்படும் பிள்ளையார் ஊர்வலத்தில் ஏற்படுகின்ற நிகழ்வுகளைப் பார்க்கும்பொழுது இந்து வெறி அமைப்புகள் இவ்வூர்வலத்தைக் கலவரம் நடத்துவதற்காகவே திட்டமிட்டு நடத்துவதை அறியலாம். இந்தக் கலவரங்களில் காவல்துறையின் வேட்டகச் சூடு நடத்தப்பட்டு பல உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. பொதுச்சொத்துகள் வீணடிக்கப் படுகின்றன.

மக்களிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படுகின்றது. இவ்வூர்வலத்தைத் தடை செய்ய வேண்டி தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், திராவிடர் கழகம் முதலிய அமைப்புகளில் ஏதாவதொன்று ஒவ்வோர் ஆண்டும் வழக்குப் போடுகின்றன. ஆனால் அவை தள்ளுபடி செய்யப்படுகின்றன.

இந்தப் பிள்ளையார் ஊர்வலத்தின் எதிர் நடவடிக்கையாக இசுலாமியரும் தங்கள் வலுவைக் காட்டும் முகத்தானும் தம் மக்களுக்கிடையே அச்ச உணர்வைப் போக்கும் முகத்தானும் 'நபிகள் பிறந்த நாள்' ஊர்வலத்தைத் தொடங்கி ஆண்டு தோறும் நடத்தி வரலாயினர்.

இந்த ஆண்டு பிள்ளையார் ஊர்வலத்தை முசுலீம்கள் வாழும் தெருக்கள் வழியைத் தவிர்த்த பாதையில் நடத்திக் கொள்ள காவல்துறை இசைவு தந்திருந்தது. இந்து முன்னணியிலிருந்து பிரிந்த இந்து மக்கள் கட்சியினர் இதை ஏற்றுக் கொண்டனர். இந்து முன்னணியினர் எவ்வளவோ வற்புறுத்தியும் அதைக் கேட்காமல் பொது மக்கள் தத்தம் பகுதி பிள்ளையார் சிலைகளைத் தாங்களே அகற்றி விட்டனர். ஆனால் இராமகோபாலன் என்ற பார்ப்பனர் தலைமையிலான இந்து முன்னணியினர் வழக்கு மன்றம் சென்றனர். வழக்கு மன்றம், ஊர்வலத்தின் நோக்கம் பிள்ளையார் சிலையைக் கரைப்பதுதான் ஆகவே குறிப்பிட்ட பாதையில்தான் செல்ல வேண்டும் என்று வலியுறுத்துவதை ஏற்கவியலாது என்று கூறி வழக்கைத் தள்ளிவிட்டது. ஆனால் இராமகோபாலன் மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பது போல ஊர்வலத்தைக் குறிப்பிட்ட பாதையில்

நடத்திக்கொள்ள தில்லி மீமிசை வழக்கு மன்றம் செல்ல விருப்பதாகவும் அதுவரை பிள்ளையார் சிலைகளை அகற்றுவதில்லை என்றும் கூறியுள்ளார்.

எப்படியோ முந்தைய ஆண்டுகளில் இராமகோபாலன் போன்றோர் மக்களை ஏமாற்ற முடிந்தது. இந்த ஆண்டு ஏமாற்ற முடியாமல் போனதில் நமக்கு ஓரளவு மன நிறைவளிக்கிறது. இதற்காக உறுதியுடன் செயற்பட்டவரை மக்கள் பாராட்டுகின்றனர்.

தமிழர்கள் தாம் வாழ்ந்து வந்த தமிழ் நிலத்தை, நில அமைப்பின் தன்மைக்கு ஏற்ப ஐந்து வகைகளாகப் பிரித்து அந்தந்த நிலத்திற்கேற்ப கரணிய காரியங்களோடு தெய்வ வணக்கம் செய்து வந்த நிலை மாறிவிட்டது. சிவனியம், மாலியம் என்று இருந்து வந்த சமய நிலைகள் கூட இன்றைய இந்தியச் சட்டப்படி இந்துச் சட்டப்படி 'இந்து மதம்' என்றாக்கப்பட்டு விட்டது. வந்தேறி இனங்களின் - வந்தேறி ஆட்சியரின் கடவுள்களையும் அவர்களின் சமயங்களையும் தமிழர்கள் பல்வேறு கரணியங்களால் தழுவத் தொடங்கினர். இன்றைக்குத் தம் வரலாறு தெரியாத அளவுக்கு - தெரிந்து கொள்ள முனையாத அளவுக்கு மாறிப் போய்விட்டனர்.

சென்னை போன்ற நகர்களில் எந்தத் தெருவுக்குள் நுழைந்தாலும் தெருமுனையிலுள்ள சுவரில் 'தெருவைத் தூய்மையாக வைத்திருங்கள்' என்று எழுதுகிறபோது கூடவே பிள்ளையார், இயேசு, இசுலாம் சின்னம் ஆகிய உருவங்களே வரையப்பட்டுள்ளன. இந்த மூன்றுமே தமிழர்களுக்குச் சொந்தமானவையல்ல.

இப்படியே ஒவ்வொரு துறையிலும் இத் தமிழ்நிலத்தில் நம் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு என்று அனைத்து வாழ்வியல் கூறுகளிலும் இந்த மண்ணின் மரபு மாண்டு வந்தேறி வம்படிகளே மண்டிக் கிடக்கின்றன. வந்தாரை (ஈழத் தமிழரைத் தவிர்த்த வந்தாரை) மட்டுமே வாழ வைக்கும் தமிழகமாயிற்றே.

பாவலரேறு அவர்கள் வகுத்தளித்த கொள்கைகளுள்

1. சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகம்

2. மனம், அறிவு, வாழ்க்கை - இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.

3. பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

4. எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை முதலிய கொள்கைகளை கவனத்தில் கொண்டு, நம் வாழ்வியல் கூறுகள் அனைத்தையும் தூய்மைப் படுத்துவோம்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி:-)

வடமொழி எழுத்துகள்

- க. குழந்தைவேலன்

ஓர் ஆய்வுக்காகப் பாகதத்தை வடதமிழம் (திராவிடம்) என ஏற்றுக் கொண்டாலும் சிக்கல் மிகுமேயன்றிக் குறையாது. பாகத மொழி வேதகாலத்திற்கு முந்தையதாகக் கருதப்படினும் எழுத்துவழிச் சான்றாக கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் சற்றேறத்தாழ கி.பி. நான்காம் நூற்றாண்டுவரை இன்றைய தமிழகம் (கேரளம் உட்பட) நீங்கலாக இந்தியா முழுமைக்கும் ஆட்சிமொழியாக இருந்துள்ளதைக் கல்வெட்டுச் சான்றுகள் உணர்த்துகின்றன. அதற்கு முந்தைய தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில்கூடச் சிற்சில பாகதச் சொற்கள் காணப்படுகின்றன. இவை தமிழனால் படைக்கப்பட்ட தமிழ் எழுத்துகளாயின் வடமொழியை (சமற்கிருதத்தை)ப் போற்றும் வாயினருங்கூடப் புகழும் தொல்காப்பியர் தமிழ் நெடுங்கணக்கில் ஏன் சேர்க்கவில்லை? முதல் எழுத்தெனக் கூறாவிடினும் 'சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே' எனச் சார்பெழுத்தைக் கூறியவர் 'விரவிவரல் மரபின் ஐந்தெழுத்தும் வரையார்' என்று ஏதேனும் கூறியிருக்கலாமே. தொல்காப்பியர் பாகதம் அறியாதவரல்லர். நன்கு அறிந்தவர். 'வடவேங்கடம் தென்குமரி' என எல்லை வகுத்துச் செந்தமிழ் இலக்கணம் எழுதியவன் அதற்கு அப்பாற்பட்டுள்ள வழக்கில் வரும் வடசொற்களை வடவெழுத்து நீக்கி தமிழொடு புணர்ந்த சொல்லாகவன்றோ எழுதக் கூறினார். அதன் பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் ஒருவர்கூட இவற்றைத் தமிழ் நெடுங்கணக்கில் சேர்க்கவில்லை என்பது கருதத் தக்கது.

மேலும், 'மொழிகளின் வரலாற்றில் பிறமொழிச் சொல் நுழைவதற்கு முகாமையான கரணியமாக அமைந்தது சமயம்' எனவும், 'தமிழ்மொழி கெட்டதற்குக் காரணம் சமயம் தான்' எனவும் மதங்கள் மொழியின் தூய்மைக்கு ஊறுவிளைக்கும் பாண்மையை எடுத்துக் கூறுவர் மொழியியல் அறிஞர்கள்.

தமிழ் மொழியைப் பண்டு வந்த மதங்களும், இன்று வந்த மதங்களும் படுத்தாத பாடில்லை என்பது அனைவரும் உணர்ந்ததே. அங்ஙனமாயினும் சமய வாழ்வே தம் வாழ்வாகக் கொண்டு, இறைவன் திருவடி போற்று முகத்தான் வடமொழி வேதங்களையும், தொன்ம (புராண)க் கதைகளையும் தம் பாடல்களில் ஏற்றி, பல வட(சமற்கிருதச்) சொற்கள் சமயங் கருதி நுழைந்த போதுங்கூட ஆழ்வார்களும், நாயன்மார்களும் இவ்வெழுத்துகளை இம்மியளவும் பயன்படுத்தவில்லை. வடபுல மதங்களை ஏன் வடமொழிச் சொற்களைக்கூட ஏற்றுக் கொண்ட அவர்களுக்கு இவை தமிழ்

எழுத்துகள், தமிழன் படைத்தவை என்பது அறிவுக்குப் புலப்படாதது என்னே?

தமிழ்ப் பேரிலக்கியங்களைப் படைக்க வடநாட்டுக் கதைகளை எடுத்துக் கொண்டு பன்னூராயிரம் பாடல்களைப் பாடிய கம்பரும், வில்லிபுத்தூராரும் பிறரும் மறந்தும், பாட்டமைதிக்காகக்கூட இவ் வெழுத்துகளைப் பயன்படுத்தவில்லையே. ஜானகியைச் சானகி என்றும், ஹிரண்யனைப் பொன்னன் என்றும் ஹேம கூடத்தைப் பொற்கூடம் என்றும், விபிஷணனை வீடணன் என்றும் இன்னோரன்ன சொற்களைத் தமிழ்ப்படுத்தி அல்லது தமிழ் ஒலிப்படுத்தி எழுதிய கம்ப நாடர்க்கு இந்த க்ஷ, ஸ, ஷ, ஹ, ஜ என்பன தமிழ் எழுத்தாகத் தெரியவில்லையே? வடசொல் பல கலந்த வில்லியார் கிருஷ்ணனைக் கண்ணன் என்றும், ஹஸ்தினாபுரியை அத்தினாபுரி என்றும் இவ்வாறே பிற சொற்களையும் தமிழ்மயப் படுத்தியதும் இவ்வெழுத்துகள் அறியாமையால் எனக் கொள்ளலாமோ? இன்னும் எடுத்துக் காட்டுக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். விரிப்பின் பெருகும். எனவே இவை தமிழ் எழுத்துகள் அல்ல என்பதால் இவ்வெழுத்துகளை அறிந்தும் தமிழ் வல்ல பெருமான்கள் கைக்கொண்டிலர். மேலும் தமிழ் மொழியின் மரபைக் காப்பதில் எவ்வளவு உறுதியோடு இருந்தனர் என்பதும் விளங்கும்.

இவற்றைத் தமிழரால் படைக்கப்பட்ட தமிழ் எழுத்துகள் என்று ஏற்றுக் கொள்வதாயின் சமற்கிருத மொழி எழுதப்படத் தொடங்குமுன் (வரலாற்றுப்படி) வழக்கில் இருந்த பாகத மொழியில் றகரம் ஒழிந்த வல்லெழுத்துகள் ஐந்தினுக்கும் வரும் வருக்க எழுத்துகள் (ஒலி மற்றும் வரி) பதினைந்து மற்றும் ஐ, ஸ, ஷ, ஹ என்ற எழுத்துகள் நான்கும் மற்றுமுள்ள சுட்டெழுத்துகளும் எழுதப்பட்டன. எனவே இவையும் தமிழனால் படைக்கப்பட்ட தமிழ் எழுத்துகள் என்று ஏற்றுக் கொள்ளலாமே. (அப்படி ஏற்றால் இந்தியாவின் அனைத்து மொழி எழுத்துகளும் வேறுபாடற்றுப்போம். ஒலி ஒன்று தானே என்பதால் தேவநாகரி வடிவம் போதுமென ஏக இந்தியனாகித் தேசியம் காக்கலாமே?) இவற்றை நீக்கிவிட்டு வடதிராவிட மொழியாகிய பாகதத்தில் தமிழ் ஒலியே இல்லாத இவ்வைந்தெழுத்தை மட்டும் தமிழன் படைத்தான் என்பதும், தமிழ் எழுத்தென்பதும் அறிவிற்கேலா.

பாகத மொழி திராவிடம் ஆயினும் ஆகாவிடினும், திராவிடம் என்பதற்காக இவ்வெழுத்துகளை ஏற்பின் திராவிட மொழிகள் என்று தெள்ளத் தெளிவாக வரையறுக்கப்பட்ட தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் உள்ள அனைத்தெழுத்துகளையும் ஏற்றுக்கொள்ளலாமே. அவை யாவும் மெய்மையில் திராவிடன் படைத்தனவே - திராவிடம் என்பது தமிழம் என்பதன் வடமொழி

வடிவம். இத்தகைய ஏற்புக்கும், சேர்ப்புகளும் பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்கான கதையாய் மொழியைச் சிதைத்துவிடும் என்பது வெளிப்படை.

இரண்டாவதாக, அறிந்தோ அறியாமலோ நாம் நீண்ட நாட்களாகப் பயன்படுத்திவிட்டோம்; நம் வழக்கில் வந்துவிட்டதை வெறுக்கக் கூடாது. இது நமது மொழிக்கு ஆக்கம் என்றும் இது ஒரு வகை வளர்ச்சி என்றும் சிலர் கூறுவர். வழக்கில் வந்து விட்டது என்பதற்காக ஒன்றை அப்படியே ஏற்றுக் கொள்ளல் வேண்டுமென்பது அறிவுடைமை ஆகாது. அவற்றின் நலந்தீங்குகளைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். நமக்கு ஆக்கந் தராது அழிவைத் தருமேயானால் அவற்றை வலிந்து விலக்கிடவே சாலும். வெண்சுருட்டுக் குடிக்கப் பழகிவிட்டது என்பதற்காக உயிர்கொல்லும் நஞ்சை உட்கொள்ள உலகம் ஒப்புமா. சங்கத் தமிழன் வாழ்க்கையில் ஊனும் கள்ளும் பெற்ற பேரிடத்தை வேறெவையும் பெற்றில. தேட்கடுப்பன்ன நாட்படு தேறலை மாந்தும் பழக்கம் பண்பாடாய் அமைந்துவிட்டது. உரோம நாட்டில் இருந்து வினைமாண் நன்கலங்களில் இறக்குமதி செய்தோம். மன்னர்கள், புலவர்க்குப் பெருமை செய்யும் பொருட்களுள் மது முதலிடம் பெற்றது. இத்தகைய நெடிய பண்பாட்டையே தமிழ்மறை வேந்தனும் மற்றைச் சான்றோரும் தீதெனச் சாடி ஒதுக்கவில்லையா. அது போல மொழியின் மரபுக்கும், தனித் தன்மைக்கும் இரண்டகம் விளைக்கும் இவ்வெழுத்துகளை இன்னாதென இன்னே விடுத்தல் வேண்டும்.

வடமொழியாளர்களின் வரவால், வலிந்த திணிப்பால் வடசொல்லும், அதன்வழி வடவெழுத்துகளும் பெருகி மணிப்பவளம் (மணிப் பிரவாளம்) என்ற ஒரு பொல்லா உரைநடை தோன்றியது. பல தமிழ் அறிஞர்கள் (1) இதனைத் தமிழ் மொழிக்கு ஆக்கம் என்றும், அப்படி எழுதுவதுதான் அழகு, அறிவுடைமை என்றும் போற்றிப் புகழ்ந்தனர். தலைமேல் வைத்துக் கூத்தாடினர். நூல்களும் உரைகளும் பல்கின. அதற்கு இலக்கணங்கூட வகுத்தனர். அதனைப் பெருவழக்காய் வந்து விட்டதென்பதற்காக நற்றமிழறிஞர் ஏற்காமல் ஒதுக்கினரே. வெறுத்துச் சாடினரே ஏன்? அவற்றால் தமிழ் அடைந்த கேட்டை எண்ணியன்றோ. அத்தகைய பணிப்பவன நடைக்கு வித்தாய இவ்வெழுத்துகள் போற்றப்பட வேண்டுமோ?

இவ்வெழுத்துகளும், இவற்றாலாய சொற்களும் தமிழும் அல்ல. நம் வழக்கில் இயல்பாய் ஏற்றுக் கொண்டனவுமல்ல. கரவுடை நெஞ்சத்தால் கலக்கப்பட்டன. பகுத்தறியா மக்களால் வளர்க்கப்பட்டன என்பதை ஓர்தல் வேண்டும். இதுவே வரலாறு. அதனால் ஏற்பட்ட மொழி இன நாட்டு அழிவுகள் எத்துணை. அகன்ற தமிழ்நாடு தெலுங்காய், கன்னடமாய், முடிவில் மலையாளமாய் இன்னும்

பற்பலவாய்ச் சிதறுண்டு போவதே. இதனைத் தெளிவார், வடமொழி (ஏன் பிறமொழி)க் கலப்பை ஒப்பாதது போல இவ்வெழுத்துகளையும் ஏலார். தமிழ் தன்னிலை கெட விழையார். பண்டையோர் இட்ட மொழிக்காப்பு வேலிகளை உடைத்து ஆடும் மாடும் புக்க நிலமாய்த் தமிழ்ப் பயிரை அழிக்க ஒருப்படார். அத்தகைய குணக்கேடுகள் அழிக்கப்பட்டதும் உண்டு. ஆகவே வழக்கில் வந்து விட்டதென்பதற்காக ஏற்கவியாது.

இன்றைய அறிவியல் ஊழியில் உலகம் சுருங்கிவிட்டது. பன்மொழி மக்களோடு பல்வகைத் தொடர்பு இன்றியமையாததாகிவிட்டது. பிறமொழிகளை அறிய வேண்டிய நேர்வும், அவாவும் மிகுந்துவிட்டது. அத்தகைய தேவைகளுக்காகப் பிறமொழிச் சொற்களை எழுதிக் காட்டவும் - பிழை நேராது ஒலித்துக் காட்டவும் இவ்வெழுத்துகளை நாம் தமிழ் எழுத்துகளோடு சேர்த்துக் கொள்ளலாம் என்பர் ஒரு சாரர். இஃது எந்த அளவுக்கு ஏற்புடையது என்பதுச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

உலகில் உள்ள எந்த ஒரு மொழியாலும் பிற மொழிகளில் உள்ள அனைத்துச் சொற்களையும் ஒலி பிழையாமல் எழுதிக் காட்டுதல் இயலாது. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வோர் இடர்ப்பாடு உண்டு. இதுவரை அவ்வம் மொழியில் உள்ள எழுத்துகளைக் கொண்டே எந்த அளவுக்கு ஏலுமோ அந்த அளவுக்கு எழுதிக் காட்டி, செவிப்புல நேர்வால் ஓர்ந்து செப்பமாக ஒலித்துக் காட்டலே இன்றைய நடைமுறை. பிற மொழியில் உள்ள ஒலிக்கேற்ற எழுத்து தம்மிடையே இல்லை என்பதற்காக எந்த ஒரு மொழியும் பிற மொழி எழுத்துகளைக் கடன் கொண்டதாக வரலாறு இல்லை. எடுத்துக்காட்டாக நம்மிடையே இருந்து ஏற்றுமதியான பல பொருட்களுக்கு மேலைநாட்டு மொழிகளில் சொற்களில்லை. அதனால்

அரிசி	-	Rice
இஞ்சி	-	Ginger
பரல்	-	Pearl
கட்டுமரம்	-	Kattamara
கயிறு	-	Kayar

தம் மொழியின் இயல்புக்கேற்பவே எழுதினர். இவற்றில் பலவற்றிற்கு அவர்களின் எழுத்துகளையேகூடப் பயன்படுத்திவிட முடியும். ஆனாலும் செய்யவில்லை.

தமிழ் என்றும், மறவன், என்றும் தமிழ்ச் சொற்களை எழுதிக்காட்ட வேண்டுமே என்பதற்காக எந்த மொழி ழ, ற, வைக் கடன் வாங்கியது? சிந்து என்பதை Indu என்றும் Indus என்றும் தானே எழுதினர். 'இந்தி'

என்ற இந்திய நாட்டு மொழியை உலகில் உள்ள எந்த மொழி அப்படியே எழுதிக் காட்டியுள்ளது. Afganistan, Fan என்ற சொற்களுக்காக எத்தனை மொழிகள் 'F'ஐக் கடன் வாங்கின. விரிப்பின் பெருகும்.

நிற்க, உலகில் உள்ள அனைத்து மொழிகளின் இடுகுறி காரணப் பெயர்களை அவ்வம் மொழிகளின் ஒலி பிசகாமல் எழுதிக் காட்டவும், ஒலித்துக் காட்டவும் வேண்டுமாயின் ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ போன்ற எழுத்துகள் மட்டும் போதா. உலகமொழிகள் ஒருபுறம் இருக்க இந்திய மொழிச் சொற்களை மட்டுமேனும் ஒலிப்புப் பிசகாமல் எழுதிக்காட்ட வேண்டுமாயின். மேலும் பத்திருப்பது எழுத்துகளும், அவற்றின் கட்டு வடிவுகளும் தேவை.

எனவே, உலகின் பல்வேறு மொழிச் சொற்கள் எல்லாவற்றையும் எல்லாமொழிகளாலும் எழுதிக்காட்ட இயலாது என்பதும் ஷ, ஐந்தெழுத்துகளை மட்டும் கடன் பெறுவதால் அச்செயல் நிறைவேறாது என்பதும், உலகின் எந்த மொழியும் அத்தகைய செயலை மேற்கொள்ளாத பொழுது நீண்ட நெடும் மரபை உடைத்து நமது மொழிக்குக் கேடு தேடல் தவிர்க்கத் தக்கது என்பதும் மனங்கொளல் வேண்டும்.

மேலும், 'மொழி மரபோடு முழுதும் முரண எழுத்தையும் சொல்லையும் புகுத்தல் வழுவாகும். அப்படிச் செய்வது தமிழை வதைத்தொரு புதுமொழி படைப்பதாகும்' எனவும் 'மெய் முதலாத் தொடங்குவதும் தமிழில் இல்லா ஒலி இயல்புகளை உடையதுமான பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொண்டு வழங்குவதும் தமிழ் இயல்பை மாற்றிவிடுமாதலால் தவறாகும். அக் கேடு புகுத்தாமல் தமிழைப் பேண வேண்டும். எனவும் அறையும் நாவலர் பாரதியின் நன் மொழிகளை உளங் கொள்வோமானால் எழுத்துச் சேர்ப்பு எண்ணம் தோன்றாது.

(தொடரும்)

பாவலரேறு ஐயா அவர்களின்
திருக்குறள் மெய்ப்பொருளுரை

நம் அரும் பெறல் ஐயா பாவலரேறு அவர்கள் தம் வாழ்நாள் பின்பகுதியின் பெருமுயற்சியாய் எடுத்துக் கொண்டு எழுதிய திருக்குறள் - மெய்ப்பொருளுரை - (ஐயா அவர்கள் எழுதி முடித்துள்ள வரையில்) வரும் 10-3-97 அன்று வெளியிடப் பெறுகிற வகையில் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

ஆயிரம் பக்கங்களுக்கும் மேலான அந்நூல் வெளியீட்டின் பெருமுயற்சிக்கு அன்பர்களின் துணையே பெரிதும் எண்ணப் பெறுகிறது.

- ஆசிரியர், 'தென்மொழி'

செய்திகள்

(பாவலரேறு ஐயா அவர்கள் உடல் நலங் குன்றி மருத்துவ மனையில் இருந்த நிலையில் ஐயா அவர்கள் முன்னர்ப் பங்கேற்ற நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகள் பல தென்மொழியில் வெளிவராமல் இருந்தன. கையெழுத்துப் படிகள் கோப்பில் ஐயா அவர்கள் எழுதிவைத்திருந்தனவும் விடுபட்டனவுமான அச் செய்திகள் ஈண்டு இடம்பெறுகின்றன. - ஆசிரியர்.)

1. இரா. கந்தசாமி - கு. குமுதம் - வாழ்க!

திபி. 2025 விடைத்திங்கள் 16.5.94 அன்று ஈரோடை சூரம்பட்டி எசு.எசு.எம். திருமண மண்டபத்தில் ஈரோடு பாவேந்தர் இராமலிங்கம் அவர்களின் தம்பி அ.குமரன் - கு. செல்வத்திருமகள் இணையரின் அன்பு மகள் திருநிறைச்செல்வி கு. குமுதம் அவர்களுக்கும் திருநிறைசெல்வன் இரா. கந்தசாமி அவர்களுக்கும், உலகத்தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆசிரியருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. புலவர். அரசமாணிக்கனார், நாடக ஆசிரியர் அதியமான், பாவலர் கண்ணன், ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

2. இ. இராசகுருசாமி - இல. மலர்விழி - வாழ்க!

தி.பி. 2025 விடை 9 (23-5-94) பல்லவபுரம் சிவந்தி ஆதித்தனார் திருமண மாளிகையில் திருவாளர் குரு. இதயமணி - பட்டம்மாள் இணையரின் அருமை மகன் செல்வன் இ. இராச குருசாமி - க.இ.க்கும், செல்வி. இல. மலர்விழி - க.இ.க்கும் திருமிகு இர. சிற்றம்பல பாண்டியன் அவர்களின் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது.

நிகழ்வின் போது மணமக்களுக்கு, நம் பாவலரேறு ஐயா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மற்றும் திருவாளர்கள் பழ. நெடுமாறன், சேப்பியார், கோ. அய்யாவு, பம்மல்.நல்லதம்பி, சைதை து. புருசோத்தமன், எல்ல. இராசமாணிக்கம், மயிலை வே. தமிழ்மணி, அ.பொ. முனுசாமி, முனைவர். அரு. கோபாலன், த. சுந்தரராசன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

3. லெ. மருதமுத்து - இந்திரா - வாழ்க!

தையல் தங்கம் - கனகராசு - வாழ்க!

தி.பி. 2025 விடை(வைகாசி)த் திங்கள் 15 - ஆம் நாள் (29-5-94) கோனூர் நாடு தெக்கூர், மறைந்த இலக்குமணன் - சாமியம்மாள் இணையரின் மகன் செல்வன் லெ.மருதமுத்துவிற்கும், கருக்காடிப்பட்டி,

மறைந்த சுயம்பரசாமி - தவமணி இணையரின் மகள் செல்வி இந்திராவுக்கும்,

தெக்கூர் இலக்குமணன் - சாமியம்மாள் இணையரின் மகள். தையல் தங்கத்திற்கும், வடக்கூர் வடக்கு வெங்கடாசலம் நவமணி இணையரின் மகன் கனகராசு, அறி.இக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் தலைமையில் தமிழ்த் திருமணங்கள் இனிதே நடைபெற்றன.

நிகழ்ச்சியின்போது திரு.எல. காத்தலிங்கம் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு மணமக்களுக்கு பாவலர். சு. சோதிவேல், அ. சிங்காரவேலு, சிவ. இராசன், முத்து, உத்திராபதி, சா. வேலாயுதம் ஆகியோர் வாழத்துரை வழங்கினார்கள். திரு கா. உமாபதி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

4. பாவேந்தர் பாரதிதாசன் - 5ஆம் ஆண்டு விழா - காரைக்குடி

காரைக்குடியில் கடந்த 30.5.94, 31.5.94 ஆகிய இரு நாள்களில் பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவைச் சார்பில் காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் பாரதிதாசன் - ஐந்தாம் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இரண்டாம் நாள் மாலை 5 மணியளவில் ‘கனல் தெறிக்கும் கருத்தரங்கம்’ நடைபெற்றது. புலவர். அப்துல் ரகுமான், அவர்கள் தலைமைத் தாங்க, திரு. முத்து இரவீந்தரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். தஞ்சைப் பல்கலைக் கழகம் சொல்லாய்வறிஞர் அருளியார் அவர்கள் தமிழ் தந்த அறிவியல் தொடர்பாகச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். மற்றும் தாமரை இலக்கிய இதழ் பொறுப்பாசிரியர் சி. மகேந்திரன், இரா. பாவாணன், கவிதைப் பித்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள். நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் நிறைவுரையாற்றினார்கள். இளங்கோ அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

5. நற்றேவன் - தமிழிசை வாழ்க !

கடந்த தி.பி. 2025 விடைத் திங்கள் 27 - ஆம் நாள் (10.6.94) காஞ்சியில் சண்முக சுந்தரம் திருமணக் கூடத்தில் நெடுநாளைய தென்மொழி அன்பரும், தூய தமிழ்ப் பற்றாளருமாகிய திரு. மா.செ. தமிழ்மணி - த. கோதையம்மாள் இணையரின் அன்புமகள் செல்வி. தமிழிசைக்கும், பனப்பாக்கம் திரு. ஏகாம்பரம் - சரசுவதி இணையரின்

அருமை மகனும் தென்மொழி ஆர்வலரும் தொண்டருமான செல்வன். நற்றேவனுக்கும் நம் பாவலரேறு ஐயா அவர்களின் தலைமையில் தமிழ்த்திருமணம் சிறப்புற நடைபெற்றது. ஐயா அவர்கள், மணமக்களை வாழ்த்தி, 'அறம், பொருள், இன்பம்' எனும் தலைப்பில் நீண்ட சொற்பொழிவாற்றினார்கள். தேனிசை செல்லப்பா அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் நிகழ்ச்சித் தொடங்கியது. புலவர். தமிழேந்தி அவர்கள் வரவேற்புரையாற்றினார். சொல்லாய்வறிஞர் ப. அருளியார் அவர்கள் மணமக்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். மணமக்களை, திருவாளர்கள், பாவலர். காசி. ஆனந்தன், புலவர். வே. தமிழ்மாறன், பேரா. ப. கல்யாணி, வழக்கறிஞர். த. பவணந்தி, சென்னிமலை பொன்னுச்சாமி (பு.இ.மு) ஆகியோர் வாழ்த்தி உரையாற்றினார்கள். திரு. த. தமிழினியனின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இனிதாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, தென்மொழி குடும்பத்தார் அனைவரும் பங்குக் கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். தமிழ் அன்பர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

'தடா' கண்டனப் பொதுக்கூட்டம்

கடந்த 13-6-94 - அன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு கோவை - பாப்பநாயக்கன் பாளையம் இடத்தில், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பில், 'தடா' - அடக்குமுறைத் தடைக் கெதிரானக் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. உலகமுதல்வன் தலைமை தாங்கினார். திரு. பொழிலன் அவர்கள், 'தடா'க் கொடுஞ் சட்டத்தின் கீழ்ச் சிறைப்படுத்தப் பட்டுள்ள, கோவை இராமக்கிருட்டிணன், ஆறுச்சாமி உள்ளிட்ட 8 தோழர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரி அரசை வலியுறுத்துவதற்காக தொகுக்கப்பெற்ற தீர்மானங்களை அறிவித்தார். நிகழ்ச்சியில் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கள் கலந்து கொண்டு கோவை. கு. இராமக்கிருட்டிணன், ஆறுச்சாமி - இருவரும் பெரியாரின் உண்மைத் தொண்டர்கள். மாபெருந் தொண்டர்கள் என்றும், இந்தியாவே ஒரு சிறைக் கூடமாக இருக்கிறது என்றும், இன்றைக்கு 65 ஆயிரம் பேர் 'தடா'க் கொடுஞ் சிறையில் இருக்கிறார்கள் என்றும், மற்றும், மிசா, தேசியப் பாதுகாப்புச் சட்டம், காபிபோசா ஆகிய கருப்புச் சட்டங்களும் ஏழை மக்களை மிகவும் கொடுமைப் படுத்துகின்றன என்றும் கூறி நீண்ட பேச்சுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில், திருவாளர்கள். சுப. வீரபாண்டியன், தமிழ்மாறன், சாந்தகுமார், திராவிடன் சாதிக், அதியமான், வெண்மணி, தமிழ் - முகிலன், தமிழ்விரும்பி, இளங்கோவன் - போன்ற பல்வேறு அமைப்பினர் கண்டன உரைகளை ஆற்றினார்கள். திரு. குழந்தைவேலு அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

மக்களவை

நயன்மை கேட்புமடல் - விளக்கம்

மதிப்புயர் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

முந்தைய தென்மொழியில் அறிஞர் அ.மார்க்சு அவர்கள் 'நம் பாவலரேறு ஐயா அவர்களை இழித்துரைத்துப் பேசியதைத் திறனாய்ந்து எழுதிய மடலுக்கு, தென்மொழி, சுவடி 28, ஓலை 9 - இல் அ.மார்க்சு அவர்களின் விடை மடலைக் கண்டேன்.

அதில் அவரை நான் 'அவதூறு' - செய்ததாக எழுதியிருக்கிறார். பாவலரேறு ஐயா அவர்கள் வேளாளர்க்குக் கோவணமாகச் செயல்பட்டார் என அறிவுக்குப் பொறுத்தமில்லாமல் ஐயா அவர்கள் மீது சேற்றை வாரி இறைத்த அ.மார்க்சு அவர்களை நயன்மை கேட்டே அந்த மடலை நான் எழுதியிருந்தேன்.

அ.மார்க்சு அவர்கள் கிருத்துவ நிறுவனத் தொடர்புடையவர் என நான் நிறுவி விட்டால் அவர் அரசியல் வாழ்க்கையிலிருந்தே விலகிக் கொள்வதாகவும், அப்படி நான் நிறுவத் தவறினால் வெளிப்படையாக வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்கள்.

முதலில், இச் சிக்கல் அ.மார்க்சு அவர்களைச் சார்ந்து எழுந்ததில்லை. பாவலரேறு ஐயா அவர்களை அ.மார்க்சு அவர்கள் இழித்துரைத்ததை வைத்தே எழுந்தது.

எனவே, அ.மார்க்சை ஒட்டி எழக்கூடிய சிக்கலாக ஏதும் வருகிற போது நான் அதை உறுதியோடு வெளிப்படுத்த அணியமாக உள்ளேன். ஆனால் அதற்காக அ.மார்க்சு அவர்கள் அரசியலிலிருந்தே விலக வேண்டும் என உணர்வுவயப்படுவது தேவையற்றது. அவர் கிருத்துவ நிறுவனத் தொடர்புகளை முற்றிலும் அறுத்துக் கொண்டு, அவற்றின் முனைமுழுக்கும் அரசியலைக் கடுமையாகச் சாடினாலே போதும்.

மேலும், வேளாளர்க்குக் கோவணமாகச் செயல்பட்டதாக இழித்துரைக்கப்பட்ட பாவலரேறு ஐயா அவர்கள் தம் இறுதி நாள் வரை அன்றாட வரவை வைத்தேதான் தொல்லைப்பட்டு நடத்தினார்கள் - என்பதைச் சுட்டிக் காட்டவேதான், அ.மார்க்சு போல் ஏழாயிரம் உருவா ஊதியம் பெற்றுக் கொண்டு ஐயா அவர்கள்

இருக்க வில்லை என எழுதினேனே தவிர, அவ்வாறு ஊதியம் பெற்றுக் கொண்டு அரசியலில் ஈடுபடுவது தவறு என நான் எழுதிவிடவில்லை.

அன்புடன்,
செல்வம், சென்னை.

தென்மொழியை நூலகங்களுக்குப் போடுங்கள்

மாண்புமிக்க முதலமைச்சர் கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு வணக்கம்.

தங்களுடைய தலைமையிலான அமைச்சகம் பதவிஏற்றவுடன் தமிழுக்கு ஓர் ஏற்றம் கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

....

என்னுடைய வேண்டுகோள் தென்மொழி திங்கள் இதழை அரசு அனைத்துப் படிப்பகங்களிலும் இருக்கும்படிச் செய்தால் இதழை நடத்த ஒரு தூண் கிடைக்கும். மேலும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. தமிழ்க் குடிமகனார் அவர்கள் எல்லா இடங்களிலும் உள்ள பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்து எழுதப் படவேண்டும் எனக் கூறி இருக்கிறார்கள். அதற்குத் தென்மொழி நல்ல ஆசானாகப் பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே அருள் கூர்ந்து இந்த என் வேண்டுதலை ஏற்று 'தென்மொழி' இதழ் அனைத்துப் படிப்பகங்களுக்கும் போக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி அன்பாகவும் பணிவுடனும் நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

வணக்கம்

தங்கள் அன்பும் பணிவும் மிக்க,
அதியமான், தாழையூற்று.

தென்மொழி

தூயதமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
(ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.)

ஆண்டுக்கட்டணம்	உருபா.	48.00
அரையாண்டுக்கட்டணம்	உருபா.	24.00
தனியிதழ்	உருபா.	4.00

வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்திவழி ஆண்டுக்கட்டணம் – 300/–
2. கப்பல்வழி ஆண்டுக்கட்டணம் – 200/–

நமக்கு வந்த மடல்கள்.

அமைச்சர் அவர்களுக்கு,

நான் ஓய்வு பெற்று ஒல்லும் வகையெல்லாம் ஓய்வு அறியாப் பணி செய்வேன். தென்மொழி வழியாகத் தமிழ்த்துறை அமைச்சர் மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகனார் அவர்களுக்கு நம் எண்ணங்களை நேரில் குழுவாகச் சென்று தெரிவிக்கலாம் அல்லவா? பயன் விளையுமல்லவா?

தமிழ்நாடு முழுதும் வட்டத் தலைநகரங்கள், மாவட்டத் தலைநகரங்கள், நெறிமன்றம், ஆட்சி அலுவலகம் அமைந்துள்ள - மக்கள் கூடுமிடங்கள் பேருந்து நிலையம் போன்ற இடங்கள், ஏந்தான இடங்களில் செய்திப் பலகை அமைத்து, நம் கொள்கைகள் பரவத் தக்கதைச் செய்தால் பயன் விளையும் என்பது என் எண்ணம். கலந்து எண்ணிச் செய்யத் தக்கவாறு துணை செய்யுங்கள். நான் எண்ணியதைச் செய்த பின்னர் செய்தி வெளியிடுவேன்.

த. வையை நம்பி, திண்டுக்கல்

பெருமதிப்பிற்குரிய அம்மாவுக்கு பணிவான வணக்கங்கள்

பாவலரேறு ஐயா அவர்களின் நினைவாக உருவாக்கப்படும் ‘தமிழ்க்களத்துக்கு’ என்னுடைய சிறு அன்பளிப்பைக் காசோலை வழியாக விடுக்கின்றேன். அருள்கனிந்து பெற்றுக் கொள்ளவும். அதிக அளவில் பொருளுதவி செய்ய என் எளிய பொருள் நிலை இடந்தரவில்லை. ஆயினும் ஒல்லும் வகையெல்லாம் நண்பர்கள் மூலம் பணந்தண்டியும் தனித்தும் உதவ முயல்வேன்.

தங்களை வாழ்த்தும் அளவுக்கு அகவையிலோ தொண்டிலோ பெரியவனல்லன், ஆயினும் தாங்கள் நல்ல உடல் நலத்துடனும், நீண்ட வாணாளுடனும் தமிழ்ப் பணிபுரிய என் நெஞ்சம் நிறைந்த அன்பையும் விழைவையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்றாப் புகழுடைய அய்யாவின் தொண்டுக்கு
நன்றி நவின்றிடவே நாமெல்லாம் நாளும்
இனம் மொழி நாட்டின் விடுதலை வேண்டி
இமிழா(து) உழைப்போம் இணைந்து!

வாய்நீளம் வம்பளப்பு செய்யாமல் மெய்யாக
தாய் நிலத்தின் மேன்மைக்குத் தாளாற்றி; ஆய்ந்து பல
நல்வழிகள் சொன்னீர்கள்! அய்யாவே! நாங்கள், இனி
வெல்வோம் பகையை விரைந்து!

கோ. இரவிச்சந்திரன், சென்னை

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்



o தமிழறிஞர்கள், இனநலவுணர்வாளர்கள், நாட்டு விடுதலைப் போராளிகள் முதலான பலதுறைப் பெருமக்களிடமும் இருக்க வேண்டிய நலமிகு கருத்துக் களஞ்சியம்!

o இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் கட்டாயங் கைக்கொள்ள வேண்டிய அரும்பொருட் பெட்டகம்!

விலை உரு. 60.
பதிவஞ்சலில் பெற உரு. 75

'தென்மொழி நூல் வெளியீட்டு - விற்பனையகம்',
சென்னை - 600 005.

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

இன்றைய நிலையில் 'தென்மொழி' இதழ் விற்பனைக் கணக்கிலும், தென்மொழி நாள்காட்டி, நூல்கள், மலர்க் கணக்கு நிலைகளிலும் தென்மொழி அன்பர்களும் முகவர்களாக இருப்பவர்களும் பெருமளவில் பட்டியல் தொகைகளை நிலுவையாக வைத்திருக்கிறார்கள். அவ்வன்பர்களுக்குப் பலமுறை நினைவூட்டு மடல்கள் விடுத்தும் அமைவாகவே இருக்கின்றார்கள். தென்மொழியின் தொடர்ச்சியான வெளியீடு, நூறாசிரியம் வெளியீடு, ஐயா அவர்களின் நினைவு மலர் வெளியீடு ஆகிய தவிர்க்க இயலாத இவற்றால் மிகவும் பொருளியல் சிக்கலாக இருக்கும் இந்நிலையில் தொகை விடுத்து வைத்தால் மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தென்மொழி அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆதலின், அன்பர்கள் நிலுவைத் தொகைகளை விடுத்துவைத்து அடுத்து வருகின்ற முயற்சிகளுக்குப் பெரிதும் துணை நிற்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

– அமைச்சர், தென்மொழி

வாழ்க்கையரேனும், அத் தனிநிலைச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் கூட, பொது நிலைக்கே பெரும்பாலும் பயன்படுவதால், அவர் தந்நலம் துறந்தவர் என்றே மதிப்பிடப் பெறுவார். அவ்வாறில்லாமல், அப் பொதுநிலைச் சிந்தனையாளர், தம் அறிவு வெளிப்பாட்டைப் பிறர் நலனுக்காகப் பயன்படுத்துவது போல் தோற்றம்காட்டி, மறைமுகமாக, அதனைத் தம் தனிநிலை வளர்ச்சிக்காகவே பயன்படுத்துவாராயின், அவர் முழுக்க தந்நலத்தவரே ஆவர்.

தம் முழுமையான அறிவு வெளிப்பாட்டையும் அதன் அடியூன்றிய செயற்பாடுகளையும் பொதுமக்களுக்காகவே பயன்படுத்தும் ஒரு பேராளர், தம் தந்நலம் - தனி நலம் - கருதி எதையேனும் செய்துகொள்வாராயினும், அதுவும் பொதுநலம் கருதிய செயலாகவே கருதப் பெறும்.

இவ் வியற்கை இலக்கணத்திற்கு ஒட்டுமொத்த - தமிழினத்தின், கடந்த இரண்டாயிரம் ஆண்டுக் கால எல்லையில், பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாலும், தந்தை பெரியாரைப் போலும் பேரறிஞர் ஒருவரை, முழுக்க முழுக்கப் பொதுநலம் நாடிய ஒரு செயலாளரை - நம்மால் காண முடியவில்லை. இது வெறும் பெருமைக் கூற்று அன்று; அறிவு அடிப்படையில் ஆய்ந்து கண்ட முற்ற முடிந்த முடிவு.

வெறும் சிந்தனையால் - அறிவால் - மட்டுமே ஒருவர் பெரியாராகி விட முடியாது. சிந்தனை - அறிவு - இவற்றின் அடிப்படையில் அமைந்த செயல் ஆகிய தொடர்ச்சியான இம் மூன்றின் வழியாகவும், தம் வாணாளை முழுமையாகச் செலவிட்ட மூவுரனாளரே பெரியார் என்று மதிக்கப் பெறுவார். அவ்வாறு செயற்கரிய எண்ணிச், செயற்கரிய சொல்லிச் செயற்கரிய செய்த அந்தணாளர் பெரியார் ஒருவரே! இன்னுஞ் சொன்னால் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று திருவள்ளுவர் வகுத்துச் சொன்ன இலக்கணத்துக்குப் பொருந்தக் கூடியவரும் இவர் ஒருவரே!

(மூவுரனாளர் என்பது மூன்று உரனுடையவர் என்று பொருள் தரும் ஒரு சொல். அறிவு உரன், நெஞ்சு உரன், செயல் உரன் ஆகிய மூன்று உரன்களே மூவுரன். இந்த **மூவுரன்** என்னும் சொல்லே முவ்வுரன், முவ்வுரம் என்று ஆகி **மும்முரம்** என்று திரிந்தது. ஒன்றின் செயல் முடுக்கமே முவ்வுரம்(மும்முரம்) ஆகும். செயல் முடுக்கமாக இயங்கும் ஒருவரை முவ்வுரமாக(மும்முரமாக)ச் செயல்படுகிறார் என்பது வழக்கு.)

உரம்-உறுதி. சிந்தனையில் உறுதி; சொல்லில் உறுதி; செயலில் உறுதி; இம் மூன்றும் அமைந்த கொள்கையில் உறுதி. இவ்வுறுதி, கடந்த கால வரலாற்றில் பெரியாருக்கிருந்ததைப் போல் வேறு எந்த அறிஞர்க்கும் இருந்ததாக நம்மால் காண முடியவில்லை.

ஒருவர்க்குச் சிறந்த சிந்தனை இருக்கலாம்; அறிவு இருக்கலாம்; செயல் இருக்கலாம்; இம் மூன்றும் ஒருங்கிணைந்த கொள்கையும்

இருக்கலாம். ஆனால் அவற்றில் உறுதி - உரன் - இருக்கும் என்று சொல்ல முடியாது. இனி, அவ்வாறிருப்பினும், அவ்வுறுதி - உரன் - காலத்தால், இடத்தால், பிறர் சொல், செயல் தாக்கங்களால், பொருளால், பதவியால், ஆள்கள் பிறரால் விளர்ச்சி (தளர்ச்சி) துளியும் தோன்றாமல் நிலைத்திருக்கும் என்று கூற வியலாது. இனி, அஃதவ்வாறு நிலைத்திருப்பினும், அத்தகைய ஒருவர் அவ்வுறுதிப்பாட்டுடன் கூடிய உழைப்பை - முழுவதும் - தம் இறுதிநாள் வரை, பொதுமக்கள் நலனுக்கே பயன்படுத்துவார் என்றும் கூறவே ஒன்னாது.

கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்.

- திருவள்ளுவர் கூறிய இப் பெருமைக்குரிய பீடு இலக்கணத்தில், ஓர் இம்மியும் பிசகாமல், இறுதிவரை உறுதியுடன், தம் கொள்கை வழி நின்று உழைத்தவர் பெரியார் ஒருவரே! இவர்க்கு முன்னோரும், இவர் காலத்தோரும், தாம் கொண்ட கொள்கைகளை, ஏதாவதொன்றிற்கு இடை மாறிய தளர்வாளர்களாகவே இருப்பதை வரலாறு காட்டும்.

இவ்வாறு, பெரியாரைப் பெரியாராக நம்மை மதிக்க வைக்கின்ற அவரிடத்திருந்த தன்மைகளைப் பின் வருமாறு வரிசைப் படுத்தலாம்.

தந்தை பெரியார் அவர்களிடம் இருந்தவை:

1. தவறிலாத தனிநிலைச் சிந்தனை.

2. அதனை அளாவி நிற்கின்ற மக்களியல் மெய்யறிவு.

3. அவ்வறிவை வெளிப்படுத்துகின்ற - கள்ளம் கவடற்ற - சூழ்ச்சி கலவாத - புனைவு இல்லாத - ஆரவாரமில்லாத - உண்மையான - வலிவான சொற்கள்.

4. இவற்றின் அடிப்படையிலமைத்துக் கொண்ட, தம் கலப்பற்ற தூய சிந்தனைக்குச் சரி என்று ஒப்பிய - மக்கள் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்ட வலிவான கொள்கை.

5. அக் கொள்கைக்கெனவே இரவு, பகல் பாராது, பனி, மழை, வெயில், கருதாமல், பதவி, தம் தனிநலம் நாடாமல் உழைத்த - உடலையே ஓடாகத் தேய்த்த - அரும் பெரும் உழைப்பு!

6. அவ் வுழைப்பால் வந்து சேர்ந்த ஈட்டம் யாவையும் மக்கள் நலனுக்கென்றே விட்டுவிட்டுச் சென்ற பரந்த - பொருள் பொதிந்த - பொதுமை நலம்.

- இவ்வாறு தன்மைகளும் பெரியாரைப் போல் வரலாற்றில் வேறு யாரிடமாகிலும் அமைந்திருந்தன என்பதை எவரேனும் குறிப்பிட இயலுமா?

தென்மொழி அச்சகம், சென்னை - 6000 005. (தொலைபேசி: 8547829)